Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்,மூக்குக் கண்ணாடியகம்

பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு : 2035 ஐப்பசி 08 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ரம்ழான் 09 (24.10.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 24

# இந்தியாவுடனான பாதுகாப்பு உடன்பாடு சமாதான முன்னெடுப்புகளை பாதிக்கும்!



## கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எச்சரிக்கை

(லண்டன்)

**இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் செய்துகொள்ளப்படவுள்ள பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு - இலங்கையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் சமாதான முன்னெடுப்புக்களை பாதிக்கும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எச்சரித்துள்ளார்.**

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு கைச்சாத்திடப்படுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தியாக்கப்பட்டுள்ள நிலையிலேயே கலாநிதி அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த உடன்பாடு குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் அரசியல் குழு இன்று நாடு திரும்புகிறது!

விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப்பொறுப்பாளர் சு.ப தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்ட அரசியல் விவகாரக் குழுவினர் இன்று நாடு திரும்பவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஐரோப்பிய நாடுகளில் கடந்த மூன்று வாரங்களாக சுற்றுப் பயணம் செய்துவந்த இந்தக் குழுவினர் ஒஸ்லோவிலிருந்து ஜேர்மனிக்குச் சென்று அங்கிருந்து நேற்று முன்தினம் சுவிற்சர்லாந்துக்குச் சென்றிருந்தனர்.

இவர்கள் ஜெனிவாவிலிருந்து இன்று கொழும்பு திரும்பவுள்ளதாகவும்- கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் இவர்கள் ஹெலிகொப்ரர் மூலம் கிளிநொச்சிக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விபத்தில் காயமுற்ற வயோதிபர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளாகி

## ஜனாதிபதியின் நடமாட்டத்தை உளவு பார்த்தவர் கைதாம்!

அனுராதபுரத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் நடமாட்டத்தை உளவு பார்த்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கருப்பையா சுப்பிரமணியம் என்ற இளைஞர் நேற்று முன்தினம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

ஜனாதிபதியால் ஆரம்பிக்கப்பட்டுள்ள அபிவிருத்திக்கான போராட்டம் என்ற வேலைத்திட்டம் நேற்று முன்தினம் அனுராதபுரத்தில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்துகொண்டார்.

இந்த வைபவம் இடம்பெற்ற சுற்றாடலில் வைத்து கைது செய்யப்பட்ட குறிப்பிட்ட இளைஞர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## பெண் சிப்பாய் ஒருவர் திருமலையில் தற்கொலை!

(திருகோணமலை)

திருகோணமலை மங்கிபிறிட்ஜ் இராணுவ முகாமில் பணியாற்றி

## சமாதானப் பேச்சை ஆரம்பிக்க காத்திரமான முயற்சிகள் இல்லை!

வும்- கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடையும் இவர்கள் ஹெலிகொப்ரர் மூலம் கிளிநொச்சிக்குப் புறப்பட்டுச் செல்லவுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## விபத்தில் காயமுற்ற வயோதிபர் மரணம்!

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலிப் பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளாகி காயமுற்ற நிலையில் சிகிச்சை பெற்றுவந்த முதியவர் ஒருவர் நேற்று மரணமானார்.

அச்சுவேலி - தோப்பு என்ற இடத்தைச் சேர்ந்த 70 வயதான சிவக்கொழுந்து துரைராசா என்பவரே இவ்வாறு மரணமடைந்தவராவார்.

இவர் சில தினங்களுக்கு முன்னர் அச்சுவேலிச் சந்திக்கு அண்மையாக மோட்டார் சைக்கிளுடன் விபத்துக்குள்ளானதில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிகிச்சை பலனளிக்காத நிலையில் இவர் நேற்று மரணமடைந்தார். இவரது சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## புலிகள் விடுவிப்புக்கு ஜே.வி.பி. கண்டனம்!

படையினரால் கைது செய்யப்பட்டு மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த பத்து விடுதலைப் புலிகளும் அண்மையில் பிணையில் விடுதலை செய்யப்பட்ட நடவடிக்கையில் அரசாங்கம் ஈடுபட்டதை ஜே.வி.பி வன்மையாக கண்டித்துள்ளது.

இதுதொடர்பாக ஜே.வி.பியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்ததாவது -

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள பத்து விடுதலைப் புலிகளதும் விடுதலையில் அரசாங்கம் உத்தியோகபூர்வமாக ஈடுபடவில்லை. ஆனால் தடுத்து வைக்கப்பட்ட இரண்டு ஊர்காவற்படையினரையும் விடுவிப்பதற்காக இந்தப் பத்து விடுதலைப் புலிகளும் உத்தியோகப்பற்றற்ற முறையில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)



இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த உடன்பாடு குறித்து அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்க காத்திரமான முயற்சிகள் இல்லை!

## ஜேர்மன் இராஜாங்கச் செயலர் கவலை தெரிவிப்பு



(பேர்லின்)

இலங்கையில் - இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு காத்திரமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரையில் எடுக்கப்படவில்லையென ஜேர்மனியின் இராஜாங்கச் செயலர் எரிக் சடாதெர் கவலை வெளியிட்டுள்ளார்.

ஐரோப்பிய நாட்டுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர்மட்ட அரசியல் விவகாரக் குழுவினரை நேற்றுமுன்தினம் ஜேர்மனிய இராஜாங்க அமைச்சின் வெளிநாட்டு அலுவல்கள் திணைக்கள அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது மேலும் கருத்துத் தெரிவித்த ஜேர்மன் நாட்டு இராஜாங்கச் செயலர் -

இலங்கை மக்களது உயிர்கள் காப்பாற்றப்படுவதற்கும் அவர்கள் தமது சொந்தப் பிரதேசங்களில் சந்தோசமாக வாழ்வதற்கும் பிரதான காரணமாக அமைந்தது புரிந்துணர்வு ஒப்பந்தம்தான். தமிழீழ விடுதலைப் புலிகள் என்ன விலை கொடுத்தாயினும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 3 முஸ்லிம் காங்கிரஸ் எம்.பிக்கள் ஆளுங்கட்சியில் இணையத் திட்டம்!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குள் மாற்றுக்குழுவினராகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் விரைவில் ஆளுங்கட்சியில் இணைந்து கொள்ளவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அமீர்அலி நஜீப், திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் அப்துல் மஜீத் ஆகியோரே ஆளுங்கட்சியுடன் இணையவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே தமது கட்சித் தலைவர் மீது அதிருப்தியடைந்துள்ள இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஆளுங்கட்சியில் இணைந்துகொண்டாலும் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பாதுகாத்துக்கொள்வதற்காக தமது கட்சியின் மாற்றுக் குழுவாகச் செயற்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் அமைச்சர் மங்கள சமரவீரவுடன் இறுதிக் கட்டப் பேச்சுவார்த்தையை நடத்தியிருக்கின்றார்கள்.

இவர்கள் இணையும் பட்சத்தில் அவர்களின் நாடாளுமன்றப் பதவிகள் பாதுகாக்கப்படும் என்ற உத்தரவாதமும், பதவிகள் பற்றிய உத்தரவாதமும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

ஏற்கனவே, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிசைன் பைலா, ஆளும் கட்சியில் இணைந்து கொண்டதன் மூலம் பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

இந்த வைபவம் இடம்பெற்ற சுற்றாடலில் வைத்து கைது செய்யப்பட்ட குறிப்பிட்ட இளைஞர் நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

## பெண் சிப்பாய் ஒருவர் திருமலையில் தற்கொலை!

(திருகோணமலை)

திருகோணமலை மங்கிபிறிட்ஜ் இராணுவ முகாமில் பணியாற்றி வந்த பெண் சிப்பாய் ஒருவர் தனக்குத்தானே துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

கடந்த புதன்கிழமை இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் தற்கொலை செய்துகொண்டவர் ஊவா மாகாணத்தைச் சேர்ந்த ஸ்ரீயானி பத்மலதா (வயது 26) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவர் கடமையில் இருந்தபோது தனது ரி - 56 ரகத் துப்பாக்கியால் தன்னைச் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

## சிரித்திரன் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

தமிழர் தாயகத்தின் முன்னோடி நகைச்சுவை ஏடான 'சிரித்திரன்' மீள் வரவு அறிமுக நிகழ்வு இன்று மாலை 3.00 மணிக்கு யாழ். பல நோக்கு கூட்டுறவுச் சங்க கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

மூத்த பத்திரிகையாளர் எஸ்.எம் கோபாலரத்தினம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில்,

(12 ஆம் பக்கம் பார்க்க)







இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

எக்ஸ்போஎயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291

email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.

EXPOAIR

Your friend in the skies...


08 NOV 2004

### செடெக் நிறுவனம் நடாத்திய
# பாடல் இயற்றும் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம்

தேசிய கரித்தாஸ் செடெக் நிறுவனத்தின் நீதி சமாதானப் பிரிவு, தேசிய மட்டத்தில் நடாத்திய திறந்த பாடல் இயற்றும் போட்டியில் வெற்றி பெற்றவர்களின் விபரங்களை வெளியிட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன் பாடசாலைகள், கிராமங்களிடையே இந்தப் போட்டி நடைபெற்றது.

சிறுவர் உரிமைகளும் அவர்கள் எதிர்நோக்கும் இன்னல்களும் என்ற கருப்பொருளில் நடாத்தப்பட்ட பாடல இயற்றும் போட்டியில் 56 பேர் பங்கு பற்றியிருந்தனர்.

இந்தப்போட்டியிற் தேசிய மட்டத்தில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மாணவி சிவதாரணி சிவராஜன், முதலாமிடத்தையும, யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த அன்ரனி பீற்றர் அபீர்ராஜன் இரண்டாம் இடத்தையும், ஆனைக் கோட்டை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன பாடசாலையைச் சேர்ந்த திருமதி த.சத்தியதாசன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

இவர்களுக்கான பரிசில் வழங்கும் வைபவம் அடுத்த மாதம் ஆறாம் திகதி காலை 10 மணிக்கு திருகோணமலை புனித.யோசப் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வில் வைத்து பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப் படவுள்ளனர்.

முதலாமிடத்தைப் பெற்றவர்களுக்குக் பத்தாயிரம் ரூபா பணப்பரிசும, இரண்டாமிடத்தைப் பெற்றவர்களுக்கு ஏழாயிரம் ரூபாவும், மூன்றாமிடத்தைப் பெற்றவர்களுக்கு ஐயாயிரம் ரூபாவும் வழங்கப்படவுள்ளதாக கியூடெக் நிறுவனத்தின் இயக்குநர் ஜோ.ஜெயக்குமார் தெரிவித்தார்.



விஜயதசமியை முன்னிட்டு நேற்று யாழ்.நகர ஆலயங்கள் சிலவற்றில் இடம்பெற்ற உற்சவங்களின் சில காட்சிகள்

# வருடாந்த மாநாடும் பொதுக்கூட்டமும்

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் 55வது வருடாந்த மகாநாடும், பொதுக்கூட்டமும் இன்று காலை 9.30 மணிக்கு அளவெட்டி தெற்கு றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் வித்தியாலயத்தில் அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் தலைவர் நா.கிருஷ்ண பிள்ளையின் தலைமையில் இடம் பெறவுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக வலிகாமம் தெற்குப் பிரதேச செயலகத்தின் சமூகசேவை உத்தியோகத்தர் செ.யோகானந்தராஜா, மாகியப்பிட்டியின் பங்குத்தந்தை அருட்திரு ம.பெ.ஞானரத்தினம் அடிகளாரும், ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி ஜெ.அன்ரனிப்பிள்ளையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதில் 2003ல் தரம் 5ல் புலமைப் பரிசிற் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுக்குப் பரிசில் வழங்கலும், பல்கலைக்கழக மாணவர்களுக்குக் கல்விசகாய ஊக்குவிப்பு நிதி வழங்கலும் இடம்பெறும், இப்பரிசில்களை ஏற்கும முகமாக புலமைப் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் சார்பில் செல்வன் சி.சுஜந்திரன், பல்கலைக்கழக மாணவர்கள் சார்பில் செல்வன் சி.ஜெயானந்தனும் ஏற்புரை வழங்கவுள்ளனர். (12)

### மாகாணமட்டப் பொதுப் பரீட்சை

தரம் 9 மாணவர்களுக்கு வடக்கு கிழக்கு மாகாணக்கல்வித் திணைக்களத்தினால் வருடந்தோறும் நடாத்தப்பட்டுவரும் மாகாணமட்டத்திலான பொதுப்பரீட்சை நவம்பர் மாதம் 22ம் திகதி தொடக்கம் 29ம் திகதிவரை நடைபெறவுள்ளது.

பரீட்சைக்கான நேர அட்டவணை மாகாணக்கல்வித் திணைக்களத்தினால் சகல பாட சாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (122)

### முப்பது பட்டதாரிகள் வடமராட்சி கிழக்கில் தெரிவு

(ஆழியவளை)

பட்டதாரிகளுக்குப் பயிற்சி வழங்கும் திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து 30 பட்டதாரிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

புலிகளின் கட்டுப பாட்டுப் பகுதியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட 16 பயிலுநர்களும் கொடிகாமம் பயிற்சி நிலையத்திலும் இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 14 பேரும் பருத்தித்துறையிலும் பயிற்சிகளைப் பெற்றுவருகின்றனர். (122)

### சாவகச்சேரி படுகொலை நினைவுதினம் இன்று

சாவகச்சேரி சந்தையின்மீது இந்திய இராணுவத்தினர் மேற்கொண்ட குண்டுத்தாக்குதலின்போது படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களின் 17வது ஆண்டுநினைவு நாள் நிகழ்வு இன்று காலை 10.00 மணிக்கு சாவகச்சேரி சந்தை உட்புறத்தில் நடைபெறவுள்ளது. (29)

# வேகக்கட்டுப்பாட்டை இழந்த பஸ் மின் கம்பத்துடன் மோதியது

### மாலு சந்தியில் சம்பவம்

இலங்கை போக்குவரத்துச் சபை பஸ் - வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளாகிய சம்பவம் நேற்று மாலுசந்தியில் இடம்பெற்றது.

நேற்றுமுற்பகல் 11.30 மணிக்கு பருத்தித்துறையிலிருந்து முகமாலை நோக்கி பயணிகளை ஏற்றிச் சென்ற பஸ்வண்டியே விபத்துக்குள்ளாகிய தாகத் தெரியவருகிறது.

யாழ்.நகர் நோக்கி பயணிகளை ஏற்றிக்கொண்டு சென்ற மினிபஸ்ஸை முந்திச்செல்ல முற்பட்டவேளையிலேயே பஸ் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மின்கம்பத்துடன் மோதியது பஸ்சில் பயணம் செய்த பயணிகள் ஆபத்து எதுவுமின்றி உயிர்தப்பினர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (12,14)

### ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 12, தரம் 13 வகுப்புக்களில் தமிழ்ப் பாடம் கற்பிக்கும் ஆசியர்களுக்கான தொடருறு கல்வி வேலைத்திட்டச் செயலமர்வு நாளையும், நாளை மறுதினமும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் உள்ள ஆசிரியர் பயிற்சி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

தமிழ்ப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களை தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தெரிவித்துள்ளார். (122)

# குணாவின் நினைவுத் தூபிக்கு நேற்று அடிக்கல் நாட்டப்பட்டது

ஒப்பறேசன் தவளைப்பாய்ச்சல் நடவடிக்கையின்போது வீரச்சாவடைந்த தென்மராட்சிக் கோட்ட முன்னாள் சிறப்புத்தளபதி லெப்டினன் கேணல் குணாவினது நினைவுத் தூபிக்கு அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்றது.

தென்மராட்சி பிரதேச பொது அமைப்புகளின் ஒன்றியத்தலைவர் த.அருந்தவபாலன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அடிக்கல்லை தென்மராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கலைவாணன் நாட்டி வைத்தார்.

சாவகச்சேரி பஸ்நிலையப்பகுதியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பெருமளவிலான பொதுமக்கள் கலந்து கொண்டனர். முன்னாள் தென்மராட்சி கோட்ட சிறப்புத்தளபதியான லெப்கேணல் குணா 1993ஆம ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகளால பூநகரி முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட ஒப்பறேசன் தவளைப்பாய்சல் தாக்குதலின் போது வீரச்சாவடைந்தார்.

லெப்டினன் கேணல் குணா வீரச்சாவடைந்த தினமான எதிர்வரும் 13ஆம் திகதி சாவகச்சேரி பஸ் நிலையத்தில் அமைக்கப்படவுள்ள இத்தூபி திறந்துவைக்கப்படவுள்ளது. (29)

# கடற்புலி லெப்.கேணல் கலாத்தனின் 3ஆம் ஆண்டு நினைவுதினம் அனுஷ்டிப்பு

கடற்புலி லெப் கேணல் கலாத்தனின் மூன்றாம் ஆண்டு நினைவு நாள நிகழ்வுகள் கடந்த வியாழனன்று மருதங்கேணி இந்துத் தமிழ்க் கலவன பாடசலையில் நடைபெற்றது.

பாடசாலையின் அதிபர் மா.நவநீதமணி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பொதுச்சுடரினை மருதங்கேணி கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன், மருதங்கேணி பிரதேச ஜி.ரி.சற் இணைப்பாளர் எஸ்.யோகலிங்கம், ஆசிரியர் மகாகேதீஸ் ஆகியோா ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியினை, வடமராட்சி கிழக்கு கரையோர பாதுகாப்புப்படை பயிற்சி ஆசிரியர் கிருபன் ஏற்றிவைத்தார்.

கலாத்தனின் திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடரினை அவரது சகோதரரான போராளி செஞ்சேரன ஏற்றிவைக்க, மலர்மாலையினை ஆசிரியை மேரி விக்ரோரியா அணிவித்தார்.

மேற்படி பாடசாலையில் கல்வி கற்ற கலாத்தனின் நினைவாக பாடசாலை நினைவு மண்டபம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது.



அண்மையில் பொன்னாலை வரதராஜப்பெருமாள் வித்தியாசாலை பரிசளிப்பு விழாவின்போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்குக் கிழக்கு மாகாணசபை பிரதிச் செயலாளர் திரு.சி..ங்கராஜா அவர்கள் மங்களவிளக்கேற்றுவதைக் காணலாம். அருகில் பாடசாலை அதிபர் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் ஆகியோர் காணப் படுகின்றனர். (207)



கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயத்திற்கு அண்மையில் லண்டன் நாட்டிலிருந்து வருகைதந்த பழைய மாணவரின் உறவினர் ஒருவர் பாடசாலை அதிபர் எஸ்.சண்முககுமாரிடம் "ஒளிப்படக் கருவியை" அன்பளிப்புச் செய்வதையும் அருகில் ஆசிரியர் சி.கணேசமூர்த்தி நிற்பதையும் காணலாம். (82)


THE PENINSULA GROUP

(த பெனின்சுலா குறூப்)

- M.S.J இன்டஸ்றீஸ் (சிலோன்) லிமிட்
- J.L. மொறீஸன்சன் அன் ஜோன்ஸ் (சிலோன்) லிமிட்
- மொறீஸன் கிறேப் மிக்ஸர், வல்மெலிக்ஸ்
- லக்ரோ கிளமன் பவுடர் / லோஷன (LACTO CALAMINE POWDER /LOTION) நீவியா கிறீம்.

J.L. மொறீஸன்சன் அன் ஜோன்ஸ் (சிலோன்) லிமிட்

மருந்துப் பொருட்கள்

அக்பர் பார்மஸிடிக்கல்ஸ் (பிறைவேட்) லிமிட்

மேற்படி நிறுவனங்களின் தயாரிப்புக்களான மருந்துவகைகள், மற்றும் பாவனைப் பொருட்களின் ஏக விநியோகஸ்தர்களான எம்மிடம் நீங்கள் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்.

THE PENINSULA GROUP

(த பெனின்சுலா குறூப்)

518, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2223720 FAX - 222 3720

(எமது நிறுவனம் யாழ். போதனா வைத்தியசாலை- O.P.D க்கு முன்னால்)

(C/3282)



## சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

அரசரத்தினம் ஜெயக்குமார் என்பவரது அடையாள அட்டைய (78287386V), சாரதி அனுமதிப பத்திரமும் (DL No - A007 105661) உடுப்பிட்டிக்கும் வல்வெட்டித்துறைக்கும் இடையிலுள்ள கம்பர்மலை வீதியில் தவறிவிட்டது. இவற்றைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து நமது ஈழநாடு அலுவலகத்திலோ அல்லது பத்தினி அம்மன் கோயில், வல்வெட்டி T.P : 071 2228392 என்னும் முகவரியிலோ ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தகவல் : அ.ஜெயக்குமார். (967)

நிறஞ்சனாஸ் சங்கானை

அர்ஜுன், லாரா தத்தா, விவேக், ரகுவரன் நடித்த



அரசாட்சி

தினசரி காட்சிகள் : 11.00, 2.45, 6.00 (பு.நே)

(சி-2723)

நாகம்ஸ் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரே தின வெளியீடான



போஸ் (ரீல்ஸ்)

ஸ்ரீகாந்த், சினேகா, கபாலி மற்றும் நாகேஷ் நடித்த

காட்சி நேரம்: 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இப்பொழுது இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடான

ரவி கிருஷ்ணா, சோனியா அகர்வால் நடித்த

7/G றெயின்போ காலனி

பு.நே 10.30, 2.30, 9.30மட்டும்

ரிக்கற் முன்பதிவு செய்துகொள்ளலாம்

(சி-2725)

# வெளிமாவட்ட சிறைச்சாலைகளிலுள்ள சிறைக் கைதிகளை மட்டக்களப்புக்கு அழைத்து வருவதில் பாதுகாப்புச் சிக்கல்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து வெளி மாவட்ட சிறைச்சாலைகளுக்கு மாற்றப்பட்டுள்ள சிறைக் கைதிகளை, விசாரணைக்காக நீதிமன்றத்துக்கு அழைத்து வருவதில் பாதுகாப்புத் தொடர்பான சிக்கல்களை சிறைச்சாலை நிர்வாகம் எதிர்நோக்கியுள்ளது.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் கருணா அணியைச் சேர்ந்த சச்சு மாஸ்டர் உட்பட இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து சில கைதிகள் பதுளை, மொனராகலை மற்றும் பொலன்னறுவை சிறைச்சாலைகளுக்குப் பாதுகாப்பு காரணங்களுக்காக மாற்றப்பட்டனர்.

இரு வாரங்களுக்கு ஒரு தடவை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட வேண்டிய இந்த கைதிகள் அங்கு மாற்றப்பட்ட பின்பு, இது வரை நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜர் படுத்தப்படவில்லை.

இந்தக் கைதிகளைக் குறிப்பிட்ட தவணைகளின் போது நீதிமன்றத்துக்கு அழைத்து வர பொலிஸ் மற்றும் இராணுவம் அல்லது விசேட அதிரடிப்படையின் பாதுகாப்பை சிறைச்சாலை நிர்வாகம் பெற வேண்டியுள்ளது.

ஆனால், பாதுகாப்பு தரப்பினரோ பல்வேறு காரணங்களைக் கூறி, பாதுகாப்பு வழங்க மறுத்து வருவதாக மட்டக்களப்பு சிறைச்சாலை தகவல்கள் மூலம் தெரியவருகிறது.

இதேவேளை - கடந்த ஓகஸ்ட் 26 ஆம் திகதி மட்டக்களப்பு புதுநகரில் கைக்குண்டுடன் கைது செய்யப்பட்டு, அன்று முதல் பொலன்னறுவை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 'இராணுவ உளவாளியான சுப்பிரமணியம் யோகநாதன் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டியிருந்த போதிலும் அவர் ஆஜர் படுத்தப்படவில்லை.

இதனையடுத்து இவரது விளக்கமறியல் எதிர்வரும் 4 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் 30 ஆம் திகதி வந்தாறுமூலையில் கைத்துப்பாக்கியுடன் கைது செய்யப்பட்டு, மொனராகலை சிறைச்சாலையில் வைக்கபபட்டுள்ள கருணா அணியைச் சேர்நத குணசேகரம் சுபேந்திரன் என்பவர் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டியிருநத போதிலும், இவரும் ஆஜர்படுத்தப்படவில்லை.

இவரது விளக்கமறியல் நீதிமன்றத்தால் எதிர்வரும் 5 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பதுளை சிறைச்சாலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள சச்சுமாஸ்டர் கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபரான மகேந்திரன் புவிதரன் கடந்த செவ்வாய்க்கிழமை, தவணையின்போது ஆஜர்படுத்தப்படவில்லை. இவரது விளக்கமறியலை நீதிமன்றம் எதிர்வரும் 2 ஆம் திகதி வரை நீடித்துள்ளது.

# அரசாங்க ஊழியர்களுக்கு நிவாரணங்கள் வழுங்கப்படும்!

## ஜனாதிபதி சந்திரிகா தெரிவிப்பு



அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட நிவாரணங்களைப் புதிய வரவு - செலவுத்திட்டம் மூலம் அரசாங்கம் வழங்கும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்தார்.

அரசாங்கத்தின் அபிவிருத்தித் திட்டத்தை அநுராதபுரத்தில் ஆரம்பித்து வைத்துப் பொதுக் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

உலக சந்தையில் எரிபொருட்களின் விலை அதிகரிப்பு அரசாங்கம் எதிர்நோக்கும் பெரும் நெருக்கடியாகும். எரிபொருளுக்கு அரசாங்கம் மானியமாக 8 ஆயிரம் மில்லியன் ரூபாவை வழங்குகின்றது.

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் மின்சாரசபை நஷ்டத்தை எதிர்நோக்குகின்ற போதிலும், மக்கள் மீது அரசாங்கம் பழுவைச் சுமத்தாது. வழங்கப்படும் நன்மைகளை மக்கள் அடுத்த சில மாதங்களில் அனுபவிப்பார்கள்.

முன்னைய அரசாங்கம் மக்களுக்கான சலுகைகள் இல்லாமல் செய்திருக்கிறது. கல்வி, சுகாதார சேவைக்கான நிதி ஒதுக்கீடுகள் குறைக்கப்பட்டுள்ளன. இந்த அரசாங்கம் வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுத்திருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# தேசியமட்ட அமைச்சு கோருகிறார் தொண்டமான்

தமக்கு தேசிய மட்டத்திலான அமைச்சுப் பொறுப்பு வழங்கப்பட வேண்டும் என, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் ஜனாதிபதியிடம் கோரியுள்ளார்.



நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்த அவர் தமது கட்சிக்குத் தற்சமயம் வழங்கப்பட்டுள்ள தோட்ட உட்கட்டமைப்பு துறை அமைச்சைத் தவிர, தேசிய மட்டத்திலும் அமைச்சு ஒன்று தரப்படவேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இதைப் பரிசீலிப்பதாக ஜனாதிபதி தெரிவித்ததாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்கிடையில் சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் கொண்டு வந்தால், அதற்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் உதவ வேண்டும் என ஜனாதிபதி கேட்டுக் கொண்டார் எனினும் அதற்கு தாம் கட்சியுடன் ஆராய்ந்து பதில் கூறுவதாக ஆறுமுகன் தொண்டமான் பதிலளித்தார்.

# மனு மீதான எழுத்துமூல விளக்கம் எஸ்.பி.நீதிமன்றத்துக்கு சமர்ப்பிப்பு

உயர் நீதிமன்றத்துக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் தாம் தெரிவித்தாகக் கூறப்பட்டு, தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான எழுத்து மூல விளக்கத்தை முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்கா சமர்ப்பித்துள்ளார்.

இந்த விளக்கம் நீதிமன்ற பதிவாளரின் ஊடாக தலைமை நீதியரசருக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, தலைமை நீதியரசர் எஸ்.பி.திஸாநாயக்காவின் விளக்கத்தை உயர் நீதிமன்றத்தில் குறிப்பிட்ட மனுவை விசாரணை செய்துவரும் ஐந்து பேர் அடங்கிய நீதியரசர் குழுவுக்கு கையளித்தார்.

ஏற்கனவே தமக்கு எதிரான மனு தொடர்பில் எஸ்.பி.திஸாநாயக்க பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. உனவட்டுன பகுதியில் வைத்து கடந்த நவம்பர் மாதத்தில் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்த கருத்துக்கள், உயர் நீதிமன்றத்தை அவமதிப்பதாக, அமைந்திருப்பதாகக்கூறி அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த இருவர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.



நேற்று இலங்கை கலைக் கழகம் யாழ்.பொது நூலகத்துக்குச் சேகரித்த ஒரு தொகுதி நூல்களை அன்பளிப்பு செய்யும் வைபவத்தின்போது சிறப்பு விருந்தினர்கள் மேடையில் அமர்ந்து இருப்பதைக் காணலாம்.




அம்மா இசைத் தட்டு நேற்று நாவலர் கலாசார மண்டபத்தில் வெளியிடப்பட்டபோது மேடையில் அமர்ந்து இருந்த சிறப்பு விருந்தினர்களைக் காணலாம்

# முல்லைத்தீவில் கைதானவர்கள் காணாமற் போனமைக்கு படையினரே பொறுப்பு!

## வவுனியா நீதிமன்றம் தெரிவிப்பு

(வவுனியா)

முல்லைத்தீவுப் பகுதியில் இராணுவத்தினர் நிலைகொண்டிருந்த போது, கைதானவர்கள் காணாமற்போனதற்கு, அப்போது அந்தப் பகுதியில் நிலை கொணடிருந்த இராணுவத்தினரே காரணம் என்று, வவுனியா மாவட்ட நீதிமன்றம் கருதுவதாக, வவுனியா மாவட்ட நீதிவான் மாணிக்கவாசகர் இளஞ்செழியன் மேல்முறையீட்டு நீதிமன்றுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

25.08.1995 அன்று, தனது சகோதரரான மரியதாஸ் அன்ரனிதாஸ் என்பவர் - இராணுவத்தால் கைதாகிக் காணாமற்போனதாக இவரின் சகோதரி மேல்முறையீட்டு நீதிமன்றில் ஆட்கொணர்வு மனுத் தாக்கல் செய்திருந்தார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் நியாய ஆதிக்கம் கொண்ட மாவட்டமான வவுனியா இருப்பதன் காரணமாக இந்த வழக்கை, வவுனியா மாவட்ட நீதிமன்றத்துக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் மாற்றம் செய்திருந்தது.

இந்த வழக்கு விசாரணைகள் வவுனியா நீதிமன்றத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தது. நேற்று முன்தினம் இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது, எதிரிகள் தரப்பில் யாரும் ஆஜராக வில்லை. எனினும், வழக்காளி தரப்பில் காணாமற்போனவரின் சகோதரி ஆஜராகியிருந்தார்.

நீதிவான் தனது பரிந்துரையை நீதிமன்றில் வாசித்தார். கண்ணால் கண்ட இரண்டு சாட்சிகளின் படியும், நீதிமன்றில் அளிக்கப்பட்ட இரண்டு சாட்சியங்களின் படியும் நீதிமன்றுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்கள் மூலமும், சர்வதேச ரீதியிலும், இந்தியாவிலும் இடம்பெற்ற பல வழக்குகளை முன்னுதாரணமாகக் கொண்டு, இந்த வழக்கில் காணாமற் போனவராகக் கருதப்படும் மரியதாஸ் அன்ரனிதாஸ் - இராணுவத்தால் கைதுசெய்யப்பட்டிருப்பதாக வவுனியா நீதிமன்றம் கருதுகிறது.

இது சம்பந்தமாக வழங்கப்பட்ட சாட்சியத்தில் - இராணுவம், தாம் இந்த நபரைக் கைது செய்ய வில்லை.

முல்லைத்தீவு இராணுவ முகாம் தாக்கப்பட்டதன் காரணமாக, இருந்த ஆவணங்கள் அனைத்தும் அழிந்திருப்பதாகவும் தெரிவிப்பதன் காரணமாக, குற்றப் புலனாய்வுத் துறையின் விசாரணை மேற்கொண்டு இந்த வழக்கில் தீர்வு வழங்குமாறு வவுனியா நீதிமன்றம் மேன் முறையீட்டு நீதிமன்றுக்கு பரிந்துரை செய்வதாக மாணிக்கவாசகர் இளஞ்செழியன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# கிங்ஸ்லியின் மரணம் கொலை எனத் தீர்ப்பு!

(மட்டக்களப்பு)

இனந் தெரியாத நபர்களினால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கிங்ஸ்லி இராசநாயகத்தின் மரணம் கொலை என மட்டக்களப்பு நீதிபதி எம்.எச்.எம்.அஜ்மீர் மரண விசாரணை முடிவில் தீர்ப்பளித்துள்ளார்.

நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு நீதிமன்றத்தில் இறந்தவரின் மரண விசாரணை நடைபெற்றது. மனைவி சுகிர்தாதேவி இராசநாயகம் (வயது 60) சாட்சியமளிக்கையில் - சம்பவதினம் மாலை 4.00 மணியளவில் கள்ளியங்காட்டிலுள்ள காணியைப் பார்ப்பதற்கு எனது கணவர் மெய்க் காப்பாளரான பொலிஸ் கொன்ஸ்டபிள் ஹேமந்த திசாநாயக்க சகிதம் வீட்டிலிருந்து திறந்த காரில் புறப்பட்டு சென்றார்.

6.15 மணியளவில் நான் வீடு பெருக்கிக் கொண்டிருந்த சமயம், ஒருவர் ஓடிவந்து 'ஐயாவை யாரோ சுட்டு விட்டார்கள்' என்றார். உடனே நான் அங்கு சென்றபோது, காரின் சாரதி ஆசனத்தில், வலது பக்கக் காதோரம் சுடப்பட்ட நிலையில் எனது கணவர் இறந்து கிடந்தார்.

சுட்டவர்களைத் தெரியாது, இதற்கான காரணமும் தெரியாது என்று அவர் தனது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

காணியின் காவலாளியான இருதயம் செபமாலை (வயது 50) சாட்சியமளிக்கையில் - மாலை 5.45 மணியளவில் ஐயா 100 ரூபாவைத் தந்து சிகரட் வாங்கி வருமாறு கூறினார. அருகிலுள்ள கடைக்கு சென்று சிகரட் வாங்கிக் கொண்டிருக்கையில் வெடிச் சத்தம் கேட்டது. அப்போது கடைக் காரர் 'ஐயாவைச் சுட்டுப் போட்டார்கள் போல் இருக்கின்றது' என்று கூறினார்.

உடனே நான் அங்கு சென்ற போது ஐயாவின் காருக்கு அருகிலிருந்து இரண்டு பொடியன்கள் சைக்கிளில் ஏறி, ஜெயந்திபுரம் பக்கமாக ஓடுவதைக் கண்டேன். அவர்களுடைய பின்பக்கம் தான் தெரிந்தமையால் ஆட்களை அடையாளம் காணமுடியவில்லை என்றார்.

இந்தச் சாட்சியங்களை பதிவு செய்த நீதிபதி குற்றவியல் சட்டத்தின கீழ் இந்த மரணம் ஆட்கொலை எனத் தீர்ப்பளித்தார்.

# வடக்குக் கிழக்கிப் பகுதிகளில் 43 பேர் எயிட்ஸ் நோயாளிகள்!

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் கடந்த 7 வருடங்களில் 43 பேர் எயிட்ஸ் நோயாளிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளதாக, மட்டககளப்பு மாவட்ட பாலியல் தொற்றுநோய் தடுப்பு அதிகாரி டொக்டர் எஸ்.அருளானந்தம் தகவல் வெளியிட்டுள்ளார்.

இவரது தகவலின் படி, யாழ்ப்பாணம் - 20, கிளிநொச்சி -02, முல்லைத்தீவு - 02, வவுனியா - 01 என்ற எண்ணிக்கையில் வடக்கில் 25 பேரும், மட்டக்களப்பு - 07, அம்பாறை - 05, திருகோணமலை - 06 என்ற எண்ணிக்கையில், கிழக்கில் 18 பேரும் இந்த நோயால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். தேசிய ரீதியில் அடையாளம் காணப்பட்ட 623 பேரில் - 118 பேர் உயிரிழந்துள்ளார்கள்.

இதேவேளை - யுனிசெப் அனுசரணையுடன் யாழ்.குடாநாட்டில் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்ட ஆய்வொன்றில், குடாநாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள 20 எயிட்ஸ் நோயாளிகளில் 9 பேர் - உயிரிழந்துள்ளார்கள். குடாநாட்டின் பல பாகங்களிலும் சுமார் 500 பேர் நோய்க் காவிகளாக இருக்கலாம் என கருதப்படுகிறது.

### பைசலாபாத் டெஸ்ட்

# ஜெயசூரியவின் இரட்டைச் சதம்

# இலங்கை அணி வெற்றிவாய்ப்பில்



(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நான்காவது நாளான நேற்று சனத் ஜெயசூரிய அதிரடியாகக் குவித்த 253 ஓட்டங்கள் மூலம் இலங்கை அணி வெற்றி வாய்ப்பை எதிர் நோக்கியிருக்கிறது.

நேற்று முன்தினம் 3 விக்கெட் இழப்புக்கு 285 ஓட்டங்கள் என்ற நிலையில் இருந்த இலங்கை அணி நேற்று தொடர்ந்து ஆட்டத்தைத் தொடர்ந்தது.

131 ஓட்டங்களுடன் இருந்த ஜெயசூரியவும், 15 ஓட்டங்களுடன் இருந்த டிலான் சமரவீரவும் இணைந்து ஆட்டத்தைத் தொடர்ந்தனர்.

எனினும் அணி 309 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் டிலான் சமரவீர 21 ஓட்டங்களில் ரன் அவுட்டாகி மைதானத்தைவிட்டு வெளியேறினார்.

ஆனால், அடுத்துவந்த இலங்கை அணி வீரர்கள் சொற்ப எண்ணிக்கையான ஓட்டங்களே எடுத்தனர். அதேவேளை, சனத் ஜெயசூரிய தனது அதிரடியான ஆட்டத்தால் ஓட்டங்களைக் குவித்து இலங்கை அணியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றார்.

சமரவீரவுக்கு அடுத்ததாகக் களமிறங்கிய ஜெகான் முபாரக் 9 பந்துகளை எதிர்கொண்டு ஓட்டம் எதுவும்



பெறாமல் ஆட்டமிழந்தார். அக்தர் வீசிய பந்தை மொயின்கானிடம் பிடிகொடுத்து முபாரக் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக கலுவிதாரண களம் இறங்கி ஆட முற்பட்டாலும் அவராலும் ஒரு ஓட்டத்தைத் தாண்ட முடியவில்லை. இவர் டனேஸ் கனேரியாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

இவரைத் தொடர்ந்து சமிந்த வாஸ் களம் இறங்கி ஜெயசூரியவுக்கு தோள் கொடுக்க முயன்றார். ஆனால் 14 பந்துகளை எதிர்கொண்ட அவரால் 4 ஓட்டங்கள் மட்டுமே பெறமுடிந்தது. இவர் சொகைப் மலிக்கின் பந்து வீச்சுக்கு இரையாக நேரிட்டது.

எதிர்முனையில் விக்கெட்டுக்கள் அடுத்தடுத்து சரிந்து கொண்டிருந்த நிலையில் ஜெயசூரிய எதிர்முனை வீரர்களுக்கு பந்துகளை எதிர்கொள்ளும் வாய்ப்புக்களைக் கொடுக்காமல் அதிரடியாக ஓட்டங்களைக் குவித்துக் கொண்டிருந்தார்.

வாஸுக்கு அடுத்ததாகக் களமிறங்கிய ரங்கன ஹேரத் 8 பந்துகளில் 5 ஓட்டங்கள் மட்டும் பெற்ற நிலையில் கனேரியாவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்ததாக டில்ஹார பெர்னாண்டோ களமிறங்கினார். அவரது விக்கெட்டும் மிக விரைவிலேயே சரிந்துவிடுமென்று எதிர்பார்க்கப்பட்டாலும் - ஓட்டங்களைக் குவிக்கமுடியாவிட்டாலும் ஜெயசூரியவுக்கு சிறந்த துணையாக நின்றார்.

23 பந்துகளை எதிர்கொண்டு ஒரு ஓட்டத்தை மட்டுமே டில்ஹார பெற்றிருந்தாலும், ஜெயசூரிய - டில்ஹார ஜோடி 102 ஓட்டங்களை இணைப்பாட்டமாகக் குவித்தமை இந்த ஆட்டத்தின் சிறப்பம்சமாகும்.

டில்ஹார ரன் அவுட்டான பின்னர் மலிங்க ஆடவந்தபோது - சனத் ஜெயசூரிய 253 ஓட்டங்களில் ஆட்டமிழந்ததால் இலங்கையணி 438 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

ஜெயசூரிய 347 பந்துகளை எதிர்கொண்டு 33 பவுண்டரிகள் 4 சிக்ஸர்கள் அடங்கலாக 253 ஓட்டங்களைக் குவித்திருந்தார். இவரது விக்கெட்டை கனேரியா கைப்பற்றினார்.

இரண்டாவது இனிங்ஸில் கனேரியா 4, அக்தர் 3, மலிக் 1 விக்கெட்டுக்களைச் சாய்த்தனர். பாகிஸ்தான் அணியினர் 37 ஓட்டங்களை உதிரியாகக் கொடுத்திருந்தனர்.

இதையடுத்து 418 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பாகிஸ்தான் அணி நேற்று தனது இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தைத் தொடங்கியது.

யாசிர் ஹமீட்டும் இம்ரான் பர்ஹத்தும் இணைந்து ஆரம்பத்தில் நிதானமாக ஆடத் தொடங்கினாலும், டில்ஹார பெர்னாண்டோவின் பந்துவீச்சு பாகிஸ்தான் அணிக்குப் பெரும் நெருக்கடியைத் தோற்றுவித்தது.



அணி 59 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் முதலாவது விக்கெட்டாக யாசீர் ஹமீட் 17 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இவரது விக்கெட்டை எல்.பி.டபிள்யூ முறையில் டில்ஹார கைப்பற்றினார்.

சற்று நேரத்தில் பாகிஸ்தான் அணி 65 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் இம்ரான் பர்ஹத்தின் விக்கெட்டையும் டில்ஹார எல்.பி.டபிள்யூ முறையில் சாய்த்தார். பர்ஹத் 63 பந்துகளில் 10 பவுண்டரிகளுடன் 53 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன் பின்னர் ஆசிம் ஹமால் 1 ஓட்டத்துடனும் இன்ஸமாம் உல் ஹக் 3 ஓட்டங்களுடனும் டில்ஹாரவின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தனர்.

ஆட்டநேர முடிவில் பாகிஸ்தான் அணி 4 விக்கெட் இழப்புக்கு 114 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியடையும் நிலையை எதிர்நோக்கியுள்ளது.

யுஹானா 23 ஓட்டங்களுடனும் சொகைப் மலிக் 3 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். பந்துவீச்சில் 9 ஓவர்கள் பந்து வீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் டில்ஹார கைப்பற்றினார். இன்று டெஸ்ட் போட்டியின் இறுதி நாள் என்பது குறிப்பிடத்தக்கது.

## நான்காவது டெஸ்ட்டில் இர்பான் பதான் ஆடுவாராம்

இந்திய அணியின் இளம் வேகப் பந்து வீச்சாளர் இர்பான்பதான் - அவுஸ்ரேலியாவுக்கு எதிராக சென்னையில் நடந்த 2ஆவது டெஸ்ட் போட்டியின் போது இவருக்கு முதுகுப் பகுதியில் தசைப்பிடிப்பு ஏற்பட்டது. இதனால் நாக்பூரில் எதிர்வரும் 26 ஆம் திகதி தொடங்கும் 3 ஆவது டெஸ்டில் ஆடவில்லை. அவருக்குப் பதிலாக ஆசிஷ் நெஹ்ரா அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் மும்பையில் நடைபெறும் 4 ஆவது டெஸ்டில் ஆடுவேன் என்று 19 வயதான இர்பான் பதான் நம்பிக்கை தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் கூறும்போது-

'தசைப்பிடிப்புத் தொடர்பாக உடல் இயக்க நிபுணர் லைபஸுடன் ஆலோசனை செய்தேன். இன்னும் சில தினங்களில் சரியாகிவிடும் அதன் பின்னர் பயிற்சியில் ஈடுபடுவேன். 4 ஆவது டெஸ்டில் ஆடுவேன்' என்று பதான் தெரிவித்தார்.

## நாக்பூர் டெஸ்ட் போட்டியில் டெண்டுல்கர் விளையாடுவார்



(சென்னை)

அவுஸ்ரேலிய அணிக்கு எதிராக நாக்பூரில் நடைபெறவுள்ள மூன்றாவது டெஸ்ட்போட்டியில் விளையாடுவதற்காக, உடற்தகுதியை இந்திய அணியின் நட்சத்திர வீரர் சச்சின் டெண்டுல்கர் நிரூபித்துள்ளார்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நாக்பூரில் ஆரம்பமாகவிருக்கும் டெஸ்ட் போட்டியில் விளையாடுவதற்கு, டெண்டுல்கர் உடற்தகுதியுடன் இருப்பதாக மருத்துவர்கள் சான்றிதழ் வழங்கியுள்ளனர்.

31 வயதான டெண்டுல்கர் டெனிஸ் எல்போ நோயினால் பாதிக்கப்பட்டதால் கடந்த சில மாதங்களாக போட்டிகளில் கலந்துகொள்ளாமல் இருந்து வந்தார்.

இவர் கடந்த சிலநாட்களாக பயிற்சிகளை ஆரம்பித்து மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டிருந்தார். இந்தப் பரிசோதனையின்போதே டெண்டுல்கர் முழு உடற்தகுதியுடன் இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

சச்சின் டெண்டுல்கர் 114 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 9470 ஓட்டங்களை பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. இதில் 33 சதங்களும் அடங்குகின்றன.

### இளைஞர் சதுரங்கப் போட்டிக்கு

## வேம்படி மாணவி கிறீஸ் செல்கிறார்



(யாழ்ப்பாணம்)

உலக இளைஞர் சதுரங்கச் சம்பியன் போட்டிகளில் கலந்து கொள்வதற்காக வேம்படி மகளிர் கல்லூரி மாணவி வித்தியாரணி சிவகுருநாதன் கிறீஸ் நாட்டிற்குச் செல்லவுள்ளார்.

உலக இளைஞர் சதுரங்கச் சம்பியன் போட்டிகள் அடுத்த மாதம் 3ஆம் திகதி முதல் 14 ஆம் திகதி வரை கிறீஸில் இடம்பெறவுள்ளன.

இலங்கை சதுரங்கச் சம்மேளனம், அகில இலங்கைப் பாடசாலைகளிடையே நடாத்திய சதுரங்கப் போட்டியில், 18 வயதுப் பிரிவில் இரண்டாம் இடத்தைப் பெற்ற வித்தியாரணி இலங்கையில் இருந்து கிறீஸ் செல்லும் 32 பாடசாலை மாணவர்களுள் ஒரேயொரு தமிழ் மாணவி என்பது குறிப்பிடத்தக்கது.

காங்கேசன்துறை தையிட்டியைச் சேர்ந்த சிவகுருநாதன் - சிவகாமி தம்பதிகளின் புதல்வியான வித்தியாரணி வேம்படி மகளிர் கல்லூரியின் 2006 ஆம் ஆண்டு கணிதப் பிரிவு மாணவியாவார்.

## தேசியமட்ட வலைப்பந்தாட்ட போட்டிகள் நேற்று ஆரம்பம்

தேசிய மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நேற்று வவுனியா மாநகரசபை மைதானத்தில் ஆரம்பமாகின.

அகில இலங்கை வலைப்பந்தாட்டச் சம்மேளனத் தலைவியான, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு மங்கள விளக்கை ஏற்றி, போட்டிகளை சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

நாட்டிலுள்ள 25 மாவட்டங்களில் இருந்தும் 18 அணிகள் இந்தப் போட்டியில் கலந்து கொள்கின்றன. வவுனியா மாவட்டத்தில் தேசிய மட்ட வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி ஒன்று இடம்பெறுகின்றமை இதுவே முதற் தடவையாகும்.






# நலன்புரி நிலைய மாணவர்கள் இடைவிலகல் அதிகரிப்பு

யாழ்.மாவட்டத்தில் நலன்புரி நிலையங்களிலிருந்து பாடசாலை செல்லும் மாணவர் மத்தியில் இடைவிலகல் வீதம் நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்வதாகக் கூறப்படுகின்றது.

நீண்டகாலமாக இந்தக் குடும்பங்கள் நலன்புரி நிலையங்களில் அடிப்படை வசதிகள் அற்றநிலையில் கொடிய நோய் மற்றும் போக்குவரத்துப் போன்ற பல்வேறு பிரச்சினைகள் காரணமாக மாணவர்கள் பாடசாலைக் கல்வியை இடைநிறுத்திவிடுவதாகத் தெரிய வந்தது.

தெல்லிப்பளை, வடமராட்சி, மருதங்கேணி, தென்மராட்சி, சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய் ஆகிய பகுதிகளிலுள்ள நலன்புரி நிலையங்களில் இந்தநிலை காணப்படுவதாகத் தெரியவருகிறது. (122)

# தியாகி அறக்கொடையால் நன்கொடைத் திட்டம்!

யாழ்ப்பாணம் - நல்லூர்ப் பகுதியில் இயங்கிவரும் தியாகி அறக்கொடை நிலையம், யாழ். குடாநாட்டிலுள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் கல்வி பயிலும் வறுமைக்கோட்டுக்குக் கீழ் உள்ள மாணவர்களுக்கு - பயன்படும் வகையில் நன்கொடைத் திட்டம் ஒன்றை நடாத்தி வருகிறது.

இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு மாதமும் ஐந்து லட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கு இந்த நிதி பயன்படுத்தப்பட்டு வருகிறது. (122)

# வல்வெட்டித்துறை வைத்தியசாலையில் இலவச கண் பரிசோதனை முகாம்

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை அபிவிருத்தி சபையினர் - வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துடன் இணைந்து இன்று இலவசக் கண்பரிசோதனை முகாம் ஒன்றை நடத்தவுள்ளனர்.

வைத்தியசாலை மண்டபத்தில் வைத்திய கலாநிதி கே.மயிலேறும் பெருமாள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்தக் கண் பரிசோதனை முகாமில், கண் பரிசோதனைகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் வைத்தியசாலையில் பதிவு செய்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இலவச கண் வைத்திய சிகிச்சை முகாமில் 40 வயதுக்கு மேற்பட்ட 200 கண் பார்வை குறைந்தவர்களுக்கு கண் பரிசோதனை செய்யப்பட்டு, கண்ணாடி பாவிக்கப்பட வேண்டும் என சிபார்சு செய்யப்படுபவர்களுக்கு, அடுத்த மாதம் 7 ஆம் திகதி மூக்குக் கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்படும் என வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (122)

## பயிற்சிப் பட்டறைக்கு பயனாளிகள் தெரிவு

(யாழ்ப்பாணம்)

மூவிமொண்டோ நிறுவனத்தால் நடாத்தப்பட இருக்கும் கமத் தொழிலாளர்களுக்கான பயிற்சிப் பட்டறைக்கு, சங்கானை பிரதேச செயலகத்துக்குட்பட்ட பிரதேசங்களிலிருந்து 40 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான பயிற்சிப் பட்டறை - சங்கானைப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இவர்களுக்கான பயிற்சிப் பட்டறையுடன் விவசாய உள்ளீடுகளும், விவசாய உபகரணங்களும் வழங்கப்படலாம் எனக் கருதப்படுகிறது. (207)




வட்டுக்கோட்டை தொழில்நுட்பக் கல்லூரியில் வாணிவிழா கொண்டாட அனுமதிக்காததால் மாணவர்களால் வீதியிலுள்ள பஸ் தரிப்பிடத்தில் வாணிவிழா கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களில் ஒருபகுதியினரையும், அவர்கள் நிர்வாகத்துக்கு எதிராகத் தாங்கியுள்ள சுலோகங்களையும் படத்தில் காணலாம்.

# அம்பன், குடத்தனை பகுதிகளில் நடமாடும் சுகாதார சேவை

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையும், எச்.ஆர்.எஸ்.கொழும்பு நிறுவனமும் இணைந்து - வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் சுகாதார வசதிகள் குறைந்த அம்பன், குடத்தனை ஆகிய இடங்களில் இலவச நடமாடும் சுகாதார சேவை முகாம்களை நடத்தவுள்ளன.

இந்த இலவச நடமாடும் மருத்துவ சேவைகள் - தொடர்ச்சியாக ஆறு மாதங்கள் நடத்தப்படவுள்ளன.

இதற்கான இடங்களைப் பார்வையிடுவதற்காக, இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளை அதிகாரிகள் கடந்த புதன்கிழமை இந்தப் பகுதிக்குச் சென்று, இடங்களைத் தெரிவு செய்தனர்.

மேலும், அம்பன் அரசினர் வைத்தியசாலை இயங்காமல் இருப்பதன் காரணமாக, இந்தப் பகுதி மக்கள் சுகாதார வசதிகளைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (122)

# பற்சுகாதார தினம் ஒக்ரோபர் 31 இல்

சுகாதார தினமாக எதிர்வரும் 31 ஆம் திகதி பிரகடனம் செய்யப்பட்டுள்ளமையால், நெல்லியடிப் பகுதியில் உள்ள முன்பள்ளிகளில் - பற்சுகாதாரம் பற்றிய விழிப் புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

வடமராட்சி தெற்கு - மேற்கு பிரதேசசபையால் நடத்தப்படும் முன்பள்ளி மாணவர்களுக்கு பற்பசை, பற்தூரிகை என்பன வழங்கி, முன்பள்ளியில் தினமும் பற்சுகாதார செயற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

இதேபோல கட்டைவேலி, நெல்லியடி ப.நோ.கூ.சங்கமும் தங்களால் நடத்தப்படும் முன்பள்ளி மாணவருக்கு, கடந்த ஆண்டு முதல் இதனை நடைமுறைப் படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

## பயன்தரு மரங்கள் பெற்றுக்கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

தேசிய மரம் நடுகையை முன்னிட்டு, யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியிலுள்ள மில்க்வைற் தொழில்கத்தில் - பயன்தரும் மரக்கன்றுகளை வெற்றுப்பால் மா பக்கற்றுகளைக் கொடுத்துப் பெற்றுக் கொள்ளலாம் எனத் தொழிலதிபர் இ.தவகோபால் அறிவித்துள்ளார்.

# சுகாதாரத்தைப் பேணாத வெதுப்பகங்கள் மூடப்பட்டன

(யாழ்ப்பாணம்)

நீண்ட காலமாக இயங்கிய இரண்டு வெதுப்பகங்கள் மீது - யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் ரி.மகாதேவன் தலைமையிலான பொதுச் சுகாதார பரிசோதகர் குழு நடாத்திய திடீர் பரிசோதனையின் போது, இந்த வெதுப்பகங்கள் சுகாதாரத்துக்கு முரணாக இயங்கியமை கண்டுபிடிக்கப்பட்டு, பருத்தித்துறை நீதி மன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து, இரண்டு வெதுப்பக உரிமையாளர்களுக்கும் தலா மூவாயிரம் ரூபா குற்றப்பணம் அறவிப்பட்டதுடன், வெதுப்பகம் இயங்குவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தச்சன்தோப்பில் இலவச மருத்துவ முகாம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் ஏற்பாட்டில் தச்சந்தோப்பு, வேலம்பிராய், கோயிலாக்கண்டி ஆகிய கிராமங்களை ஒன்றிணைத்து, இன்று காலை 9 மணி தொடக்கம் மாலை 3.30 மணி வரை தச்சன்தோப்பு பிரதேச சபை அலுவலகத்தில் இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

இந்த மருத்தவ முகாமில் வைத்திய ஆலோசனை, சுகாதார விழிப் புணர்வு, மருந்துகள் வழங்கல் என்பன நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வைப் பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை மாணவர்கள் - வைத்திய அதிகாரி ஒருவரின் உதவியுடன் நடத்தவுள்ளனர்.

## மிதிவெடி அபாயக் கருத்தரங்கு

சர்வோதய நிறுவனத்தின் அனுசரணையுடன் மிதிவெடி பற்றிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 29 ஆம் திகதி சங்கானைப் பிரதேச செயலகத்தில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடத்தப்படவுள்ளது.

மிதிவெடி அபாயம் காணப்படும் பிரதேசங்களிலிருந்து சனசமூக நிலையங்கள், மாதர் சங்கங்கள் போன்றவற்றின் பிரதிநிதிகளும் மற்றும் ஏனைய மக்கள் பிரதிநிதிகளும் இந்தக் கருத்தரங்கில் பங்குபற்றி பயனடையுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் கருத்தரங்கில் பங்கு பற்றுவோருக்கான மதிய போசனம் வழங்கப்படும். (207)

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி ஏற்றல்

(நெல்லியடி)

நெல்லியடி பொது சுகாதாரப் பரிசோதனைப் பிரிவில் நாளை வளர்ப்பு நாய்களுக்கான விசர் நோய்த் தடுப்பு மருந்து ஏற்றப்படவுள்ளது.

முற்பகல் 9 - 10.30 மணிவரை கரணவாய் கிழக்கு உச்சில் சனசமூக நிலையத்திலும், முற்பகல் 11-12.30 மணிவரை நெல்லியடி ஐயனார் கோயிலிலும், பிற்பகல் 1-2.30 மணிவரை நெல்லியடி தடங்கன் புளியடி முருகன் சனசமூக நிலையத்திலும் வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பு மருந்தை ஏற்றுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

# இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : ர.தாருஜன்
முகவரி : தமிழ்வளச் சோலை இமையாணன் கிழக்கு.

முதலாவது அகவையில்



பெயர் : பா.ஆர்த்திகா
முகவரி : அல்வாய்.

முதலாவது அகவையில்



பெயர் : ஷியாம்
முகவரி : வேலணை மேற்கு.

எட்டாவது அகவையில்



பெயர் : தே.தனோஜன்
முகவரி : நீர்வேலி.




# மூவிங்மெண்டோ நிறுவனம் உதவி

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பகுதிகளிலுள்ள அகதிமுகாம்களில் வசிக்கும் மேசன் தொழிலாளர்களுக்கான, மேசன் தொழிலுக்குரிய உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அவர்கள் தங்கியுள்ள அகதி முகாம்களில் வைத்தே இந்த உபகரணங்கள் மூவிமெண்டோ நிறுவனத்தின் பிரதிநிதிகளால் மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டன.

பெருமளவு மேசன் தொழிலாளர்கள் மூவிமெண்டோ நிறுவனத்தின் இந்த உதவியால் பயனடைந்துள்ளனர்.

# அகவை பூர்த்தியும் நூல் வெளியீடும்

சரித்திர பிரசித்தி பெற்ற வல்வெட்டித்துறை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரி அம்பாள் தேவஸ்தான பிரதம குருவும், அகில இலங்கை சமாதான நீதவானுமாகிய சிவஸ்ரீ சோமஸ்கந்த தண்டபாணி தேசிகர் ஐயாவின் 60 ஆவது வயது பூர்த்தியை முன்னிட்டு, இன்று காலை 10 மணிக்கு வல்வை ஸ்ரீமுத்துமாரியம்பாள் தேவஸ்தானத்தில் யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ் தலைமையில் மணி விழா நடாத்தப்படவுள்ளது.

இவ்விழாவை சிறப்புற நடாத்த கனடா, சுவிஸ், ஜேர்மனி, பிரான்ஸ், லண்டன், அவுஸ்திரேலியாவிலுள்ள புலம் பெயர்ந்த மக்கள் நிதியுதவி வழங்கியுள்ளனர்.

இவ்விழாவில் "தண்டபாணீயம்" என்ற மலரும் வெளியிடப்படவுள்ளதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (116)

# விளையாட்டு அரங்கு



## நியாயத்தை நினைத்துப் பாருங்கள்



பிலி போடன்
நின்றால்தான் தெரியும்

கடந்த இரண்டு வாரங்களாக இந்திய கிரிக்கெட் வீரர் ஷேவாக்கிற்கு அவுஸ்ரேலியாவுடனான முதல் டெஸ்ட் போட்டியில் நடுவர் பிலிபோடன் வழங்கிய தீர்ப்புப் பற்றி ஒரே சர்ச்சை. விளையாட்டு வீரர் களையும் தொலைக்காட்சி விமர்சகர்களையும் மட்டு மல்லாது, ஊடகத்துறையினரதும் கடுமையான சீற்றத்துக்கும் உள்ளாகியிருந்தார், COMEDY KING என்றுவர் ணனையா ளர்களால் அழைக்கப்ப டும் நடுவர் பிலிபோடன் ICCயைப் பொறுத்தவரை போட்டிக்கான அட்டவணையையும், அதற்கு வேண்டிய நடுவர்களையும், போட்டி நடுவர்களையும் நிய ·மிப்பதில் மட்டும்தான் அதிக கவனம் செலுத்தி வருகிறது. நடுவர்களால் இழைக்கப்படும் தவறுகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதில்லை என்றொரு குற்றச்சாட்டும் சமீப காலமாகவே ICC மீது சுமத்தப்பட்டு வருகின்றது.

இந்த விடயத்தில் ICC உடனடியாக நடுவர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் மௌனம் சாதிப்பது என்னவோ உண்மைதான். ஆனால், தொடர்ந்து தவறுவிடும் நடுவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்காமல் விட்டதில்லை என்பதையும் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ICC ஆல் 2002 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அதி உயர்தரம் வாய்ந்த ELITE PANAL நடுவர்கள் 11 பேர் நியமிக்கப்பட்டிருந்தனர். இவர்களில் கடந்த உலகக்கிண்ணப் போட்டிகளின் பின்னர், இலங்கையைச் சேர்ந்த அசோக டீ சில்வா, தென்னாபிரிக்காவைச் சேர்ந்த டேவிட் ஒச்சார்ட் மற்றும் சிம்பாப்வேயைச் சேர்ந்த ரஸல் ரிபின் போன்றோர் அதிலிருந்து நீக்கப்பட்டிருந்தனர்.

இதற்குக் காரணம் அவர்கள் வழங்கிய பல தீர்ப்புக்கள் சர்ச்சைக்குள்ளாகியதே. இதனால்தான் ICC அவர்களின் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டியே அவர்களை இடை நிறுத்தியது. குறிப்பாக இவர்களில் அசோக டீ சில்வாவின் LBW தீர்ப்புக்கள் மிக மோசமானவை. பந்து காலில் பட்டாலே போதும் அவர் உடனேயே விரலை உயர்த்திவிடுவார். இவரால் அதிகம் பாதிக்கப்பட்டது இந்திய அணியினர்தான்.

மேலும் ICC ஆனது ஒவ்வொரு சர்வதேச தொடர் முடிவடைந்ததுமே, அந்தத் தொடரில் கடமையாற்றிய நடுவர்களின் செயற் பாடுகள் குறித்து ஒவ்வொரு அணித் தலைவர்களிடமும் விளக்கம் கோருவதைத் தற்போது வாடிக்கையாக்கியுள்ளது.

நடுவரின் செயற்பாடுகளை நன்று, மோசம், மிக மோசம் என்று மூன்றாகப் பிரித்து அதில் சரியானதை அணித் தலைவர் துணிவுடன் எடுத்துக் காட்டுவதற்கு இது வழி செய்துள்ளது.



டேவிட் ஷெப்பேர்ட்
சொல்வது இலேசு

மேற்கூறிய இரண்டு நடவடிக்கைகளும் ICC ஆனது நடுவர்களைத் தனது கண்காணிப்பில் வைத்துள்ளமையையே தெளிவாக்கி இருக்கிற தென்றால் அது மிகையில்லை.

எனவே, சமீப காலமாகச் சர்ச்சைக்குரிய தீர்ப்புக்களை வழங்கும் சில நடுவர்களின் மீது ICCயின் பார்வை விழுந்துள்ளது பற்றி ICC நடுவர்களின் செயற்பாடுகளைக் கண்காணிக்கும்அமைப்பின் முகாமையாளர் கெய்த் மெட்லி காட் கூறும்பொழுது - கிரிக்கெட் போட்டிகளில் நடுவர்களின் செயற்பாடுகள் சிறப்பாக இருக்கவேண்டும் என்பதில் ICC மிகுந்த அக்கறை செலுத்துகிறது. அவர்களது செயற்பாடுகளை மிக உன்னிப்பாகக் கவ னிக்கிறது என்கிறார்.

எது எப்படியோ ICC ஆனது காலப் போக்கில் தவறிழைக்கும் நடுவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும் வரை, இன்னும் எத்தனையோ வீரர்கள் நடுவர்களின் தவறான தீர்ப்புக்களால் பலிக்கடாவாகப் போகிறார்கள் என்பதும் தவிர்க்கமுடியாத உண்மையாகும்.

-விமலன்-

## இதிலிருந்து ஓர் ஆரம்பம்



வெற்றிமீது வெற்றி
வந்து எம்மைச் சேரும்

பாக்ரெல் முக்கோண் ஒருநாள் போட்டித் தொடர் இறுதியாட்டத்தில் பாகிஸ்தான் அணியை 119 ஓட்டங்களால் வெற்றி கொண்டதன் மூலம் மீண்டும் தனது பலத்தை நிரூபித்துள்ளது இலங்கை அணி.

பாகிஸ்தானின் லாகூர் கடாபி மைதானத்தில் அந்த நாட்டு அணியை இலங்கை அணி அபாரமாக வெற்றி கொண்டமை 1996 ஆம் ஆண்டு இதே மைதானத்தில் உலகக் கிண்ண இறுதியாட்டத்தில் அவுஸ்ரேலிய அணியை வெற்றிகொண்டு கிண்ணத்தைச் சுவீகரித்தமைதை நினைவுபடுத்தியது என்றால் மிகையாகாது.

இந்தத் தொடரில் பாகிஸ்தான் அணியுடனான முன்னைய இருபோட்டிகளிலும் தோல்வியைத் தழுவிய இலங்கை அணி, இறுதிப் போட்டியில் அந்த அணியை அதிர்ச்சித் தோல்விக்கு உள்ளாக்கியமை இலங்கை அணியின் மன உறுதியையும், வீரர்களின் வெற்றிக்காகப் போராடும் மனப்பாங்கையுமே எடுத்துக் காட்டுகின்றது.

ஒரு அணி தொடர்ந்து இரு போட்டிகளில் தோல்வியைத் தழுவும்போது உளரீதியாகக் களைப்படைவதும், சலிப்படைவதும் இயல்பே. அதுவும் இலங்கை அணி இரண்டாவது லீக் போட்டியில் பெற்றுக்கொண்ட 293 ஓட்டங்களைப் பாகிஸ்தான் அணி அந்த இலக்கைச் சுலபமாக அடைந்தமை உண்மையில் இலங்கை அணி வீரர்களையும், பயிற்சியாளர்களையும் ஏன் ரசிகர்களைக்கூட அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.



சொகைப் மலிக்
கலங்காதே மனமே

இந்த நிலையில் தனது சிறந்த துடுப்பாட்டத்தின் மூலமும் அனுபவத்தின் மூலமும் அணியை வழிநடத்திய இலங்கை அணித் தலைவர் மாவன் அத்தப்பத்துவின் திறமையே இலங்கை அணியின் வெற்றிக்குப் பின்புலமாக அமைந்தது.

அத்துடன் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்களான சங்க கார, ஜெயவர்த்தன, டில்சான் ஆகியோரது சிறந்த நிதானமான துடுப்பாட்டம் இலங்கை அணியின் வெற்றிக்கு உறுதுணையாக அமைந்தது.

அதே சமயம் ஒரு பந்து வீச்சாளனது அனுபவமும், திறமையும் ஆட்டத்தின் போக்கையே மாற்றியமைத்து விடும் என்பதைத் தனது அனுபவம் மிகுந்த பந்து வீச்சின் மூலம் சாதித்துள்ளார் சனத்.

இதே சமயம் குமார் சங்கார இந்தப் போட்டியில் தனது பங்களிப்பை மிகத் திறமையாகவே வழங்கியுள்ளார். துடுப்பாட்டத்தில் பிரகாசித்த சங்கார விக்கெட் காப்பிலும் மிகவும் அற்புதமாகச் செயற்பட்டார். அவரால் செய்யப்பட்ட இரண்டு அற்புதமான ஸ்ரம்ப் இறுதிப் போட்டியின் திருப்புமுனையாக அமைந்தது.

என்னதான் இருப்பினும் மினி உலகக் கிண்ணப் போட்டிகளின்போது தனது ரசிகர்களை ஏமாற்றிய இலங்கை அணி பாக்ரெல் முக்கோணத் தொடரில் அதிர்ச்சியாகப் பரிகாரம் வழங்கிவிட்டது.

-லெஸ்லி.

## என்று தணியும் இந்தத் தாகம்

எதிர்பார்த்தது போலவே ஷேன்வோன் முத்தையா முரளிதரனின் டெஸ்ட் விக்கெட் எண்ணிக்கையைக் கடந்து சென்றுவிட்டார். முரளிதரன் உடனடியாகவே ஷேன்வோனுக்கு வாழ்த்துச் செய்தியும் அனுப்பியுள்ளார். இன்னும் இரண்டு டெஸ்ட் போட்டிகள் மீதமுள்ள நிலையில் இன்னும் சில விக்கெட்டுக்களை ஷேன்வோன் கவிழ்ப்பார் என்பதிலும் சந்தேகமில்லை. மேலும் முரளிதரன் 532 விக்கெட்டுக்களை ஷேன்வோனைவிட 23 டெஸ்ட் போட்டிகள் குறைவாக (முரளி – 91 வோன் – 114 இந்திய –அவுஸ்ரேலிய 2 ஆம் டெஸ்ட் வரை) விளையாடிப் பெற்றிருக்கிறார் என்பதும் குறிப்பிடத்தக்கதொன்றாகும்.



ஷேன் வோன்
தூரம் வெகுதூரம்

இருவருமே கொஞ்சக் காலத்துக்கு மாறி மாறி முந்திக்கொண்டிருக்கப் போகிறார்கள் என்பது உண்மை. ஒருசில விக்கெட்டுக்களால் மாறி மாறி முந்திக்கொண்டிருப்பதில் ஓரளவுக்குச் சுவை குறைவாகத்தான் இருக்கும் என்பதிலும் ஓரளவு உண்மையுண்டு. என்றாலும் விரும்பியோ விரும்பாமலோ இந்த ஓட்டத்தில் புதிய பரிமாணம் ஒன்று தோற்றம் பெறப்போகிறது. அதாவது இந்த வருடத்தில் அனேகமாக முரளிதரன் டெஸ்ட் போட்டிகளில் ஆடுவது சந்தேகமே. ஆனால் ஷேன்வோன் நியூஸிலாந்து மற்றும் பாகிஸ்தானுக்கு எதிராக இந்த வருடத்தில் மட்டும் இன்னும் ஏழு டெஸ்ட் ஆட்டங்களில் கலந்துகொள்ளும் சந்தர்ப்பம் உண்டு. அப்படியாயின் 2005 ஆம் ஆண்டில் வோன் குறிப்பிடத்தக்களவு தூரம் ஓடி விடுவார் என்று எதிர்பார்க்கலாம்.

இங்குதான் சுவாரஸ்யம் இருக்கிறது. கணிசமான அளவில் பின்தங்கிப்போகும் முர்ளி என்ன வகையில் ஷேன்வோனைத் துரத்தி வீழ்த்தப்போகிறார். மறுவளமாக முரளி தன்னைப் பிடிக்கமுடியாத படி வோன் என்ன ஓட்டம் முன்னோக்கி ஓடப்போகிறார் என்பன போன்றவை கிரிக்கெட் ரசிகர்களின் ஆர்வத்தைத் தூண்டும். இந்தப் போட்டி எப்போது முடியும். முரளியைப் பொறுத்து அடுத்த கரிபியன் உலகக் கிண்ணப் போட்டிவரை விளையாடும் எண்ணம் இருக்கிறது. அதோடு அறு நூறுக்கும் அறுநூற்றுஐம்பதுக்கும் இடையிலான விக்கெட்டுக்களை வீழ்த்தும் இலக்கு உண்டென்றும் கூறுகிறார். ஷேன்வோன் ஒன்றும் கூறவில்லையென்றா லும் முரளி சிந்திப் பதைப்போலவே அவரும் சிந்தித்தால் அதில் நியாயம் பலமாகவே இருக்கும். ஏதோ ஒரு முடிவு வந்துதானே ஆக வேண் டும். அது எப்போ? யார் அறிவார்? —மரியா.



முரளிதரன்
பதுங்குவது பாயத்தான்

# நீர் உயர நெல் உயரும்



ஜோன் புக்கானன்
தகுதியான ஊதியம்

மேற்கிந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்றுனர் காஸ் லோகி வெளியேறும் நிலையில் அந்த இடத்தை நிரப்பப்போகும் வெளிநாட்டுப் பயிற்றுனர் யார் என்ற கேள்வி பலமாக எழும்பியுள்ளது.

பல பெயர்கள் அடிபட்டாலும் முன்னாள் அவுஸ்ரேலிய மங்காத நட்சத்திரம் கிரெக் செப்பல் அந்தப் பதவியை ஏற்கக்கூடும் என்று பரவலாகக் கருதப்படுகின்றது. இந்த வகையில் அவுஸ்ரேலியா, நியூஸிலாந்து, தென்னாபிரிக்கா தவிர்ந்த ஏனைய நாடுகள் எல்லாம் வெளிநாட்டுப் பயிற்றுனர்களை நியமித்திருப்பதையும் காண முடிகின்றது.

ஆனால், இவர்களது கொடுப்பனவுகள் என்னமாதிரி இருக்கும் என்று பார்த்தால் பிரமிப்பாக இருக்கும். இலங்கையில் பணி ஆற்றிய டேவ் வட்மோர் வருடாந்தம் எழுபது லட்சம் ரூபாவுடன் வீட்டு வசதி மற்றும் வாகன வசதியும் பெற்றிருந்தார். தற்போது பங்களாதேஷ் அணியின் பயிற்றுனராக இருக்கும் இவர் வருடாந்தம் ஒரு கோடி ரூபாவையே பெறுவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை, தற்போது இலங்கை அணியின் பயிற்றுனராக இருக்கும் ஜோன்டைசன் வருடாந்தம் எண்பது லட்சம் ரூபாவில் இருந்து ஒரு கோடி ரூபா வரை பெறுவதாகக் கருதப்படுகின்றது.

இவர்கள் எல்லோரிலும்பார்க்கக் கூடுதலான சம்பளம் பெறுபவர் முன்னாள் சிம்பாப்வே அணித்தலைவரும் தற்போதைய இங்கிலாந்து அணியின் பயிற்றுனராகவும் இருக்கும் டங்கன் பிளெட்சர் என்று கருதப்படுகின்றார். இவரது காலத்தில்தான் டெஸ்ட் தரத்தில் எட்டாவதாக இருந்த இங்கிலாந்து இரண்டாம் இடத்துக்கு முன்னேற முடிந்திருக்கிறது. எப்படிப் பார்த்தாலும் வருடாந்தம் மூன்று கோடி ரூபாய்க்குக் குறையாமல் சம்பாதிக்கிறார் இவர்.

இதேவேளை, இந்தியக் கிரிக்கெட் அணியின் பயிற்றுனர் ஜோன்ரை அவுஸ்ரேலிய அணியை பயிற்றுவிக்கும் ஜோண் புக்கானனைவிடச் சிறிது குறைவாகவே சம்பளம் பெறுகிறாராம். அப்படியென்றால் ஜோன் புக்கானன் பெறும் சம்பளம்? அவர் பெறுவது வெறும் ஒரு கோடியே எண்பது லட்சம் ரூபாதான். இதேவேளை, தென்னாபிரிக்கப் பயிற்றுனர் எரிக்சிமன்ஸ் அதே நாட்டைச் சேர்ந்தவர். அவர் பெறும் ஊதியமும் ஒரு கோடி ரூபாவுக்குமேல். அதோடு போனஸ் மனைவி, பிள்ளைகளுக்கு இலவச விமானப் பயணம் என்று நீள்கிறது.

இந்தவகையில் பார்க்கும்போது கிரெக் செப்பல் மேற்கிந்திய கிரிக்கெட் அணியிடம் எந்தத் தொகை கேட்கப்போகிறாரோ யார் அறிவார்?

மேற்கண்ட தொகைகள் எல்லாம் இலங்கை ரூபாயில் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தவகையில் டெஸ்ட் விளையாடும் நாடுகள் எல்லாமே பொருளாதார வளர்ச்சியடைந்த நாடுகளாகக் கொள்ள முடியாது. சில வேளை வறுமை நிறைந்த நாடு களின் கிரிக் கெட் சபைகள் செல்வந்த சபைகளாக இருக்கலாம். ஆனால் அந்த நாட்டு மக்களின் வாழ்நிலை எந்த மட்டத்தில் இருக் கிறது. உதாரணமாக இலங்கையை எடுத்துக் கொண்டால் இலங்கை மக்கள் 95 % வீதமான மக்களால் வாழ்க்கைத் தரம் கோடிக்கணக்கில் பேசப்படுகிறதா அல்லது நூற்றுக் கணக்கில் பேசப் படுகிறதா. இப்படிக் கேட்பதால் இலங்கை போன்ற தொரு நாட்டுக்குக் கிரிக்கெட் தேவை தானா? என்றும் கேட்கத் தோன்றுகிறது. அதேவேளை, சர்வதேச ரீதியில் அகலப் பரவும்போது இந்த நிலைமை தவிர்க்கப்பட முடியாததாகவும் இருக்கிறது.



டங்கன் பிளெட்சர்
வளர்த்தெடுக்க ஊதியம்

–நிர்மலன்.

# சேவ்ரங்கள் சாய்வதில்லை



அரவிந்த டி சில்வா

இவருக்கு வயது 35, உலகில் கிரிக்கெட் ரசிகர்களால் மிகவும் மதிக்கப்படுபவர். தென்னாசிய கிரிக்கெட் ரசிகர்கள் மதிப்பது மட்டுமல்ல, நிறையவே நேசிக்கவும் செய்கிறார்கள். அவர் இலங்கைக்குக் கடினமான பணியாக இருக்கும் என்று நினைத்தொன்றை இலகுவாக்கி இருக்கிறார். ஆம் சனத் ஜெயசூரிய பாக்ரெல் கிண்ணத்தை இலங்கை தட்டிக்கொள்ள முக்கிய காரணமாக அமைந்தார். இவரது சகலதுறை ஆட்டக்காரர் என்ற கௌரவம் என்றும் தோற்றுப் போனதில்லை. என்னால் கணிசமான ஓட்டங்களைச் சேர்க்க இயலாமற்போன நிலையில், பந்து வீச்சிலாவது எனது திறமையைக் காட்டவேண்டும் என்று தீர்மானித்தேன் என்னும் சனத் - 5 விக்கெட்டுக்களை பதினேழு ஓட்டங்கள் மட்டும் கொடுத்து இலங்கை அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார். 1996 ஆம் ஆண்டில் இதே கடாபி மைதானத்தில் அவுஸ்ரேலியாவை வீழ்த்தி உலகக் கிண்ணத்தை வென்றபோது, அந்தப் போட்டித் தொடரின் ஆட்டத் தொடர் நாயகன் இவர். இவரது 14 வருட கிரிக்கெட் வாழ்க்கையில் 92 டெஸ்ட் போட்டிகளில் 5964 ஓட்டங்கள் ஒருநாள் போட்டிகளில் 9853 ஓட்டங்கள் குவித்தவர். இவரது தற்போதைய கவனம் தன் உடல் தகைமையைப் பேணிக்கொள் வதில் கூடுதலாக காணப்படுகிறது. இவரது அடுத்த இலக்கு 2007 ஆம் ஆண்டு கரிபியனில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி. இந்தப் போட்டிகளுடன் இன்னொரு சகாப்தம் நிறைவுபெறும் என்று எதிர்பார்த்தாலும் அதைத் தொடர்ந்தும் விளையாடுவதே ரசிகர்களின் விருப்பமாக இருக்கும்.

–ஜோசப் கிருஷ்ணா.

# இதுகூட ஒரு அழுத்தம் தான்

இந்திய கிரிக்கெட் வீரர்கள் தொடர்பில் நீண்ட காலமாக எதிர்பார்த்திருந்த கிரிக்கெட் வீரர்கள் ஒப்பந்தமுறை இறுதியாக அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது. இதனடிப்படையில் வீரர்கள் மூன்று வகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். இதனடிப்படையில் அவர்களது சம்பளங்களும் வேறுபடுகின்றன. முதன்மைப் பிரிவில் கங்கூலி, டிராவிட், சச்சின், ஷேவாக், லக்ஷ்மன், கும்ப்ளே, ஹர்பஜன்சிங் ஆகியோர் முதல் பிரிவுக்குள் அடங்குவார்கள். இவர்கள் 108930 அமெரிக்க டொலர்களை வருடாந்தம் பெற்றுக் கொள்வார்கள்.

அடுத்து இரண்டாம் பிரிவில் யுவராஜ்சிங்க மொகமட்கைவ், சகீர் கான், இர்பான் பதான், அஜித் அகர்கர், ஆசிஸ் நெஹ்ரா, பாலாஜி ஆகியோர் அடங்குகிறார்கள். இவர்கள் வருடாந்தம் 76250 அமெரிக்க டொலர்களை ஊதியமாகப் பெற்றுக் கொள்வார்கள்.

மூன்றாம் பிரிவில் பார்த்திவ்பட்டேல், ஆகாஷ் சோப்ரா, முரளிகார்த்திக் ஆகியோர் அடங்குவர். இவர்கள் வருடாந்தம் 43570 அமெரிக்க டொலர்களைப் பெறுவார் கள்.



அனுபவி ராஜா அனுபவி

அதோடு உள்நாட்டு டெஸ்ட் போட்டியொன்றுக்கு 4360 அமெரிக்க டொலர்களும், வெளிநாட்டு டெஸ்ட் போட்டியொன்றுக்கு 5230 அமெரிக்க டொலர்களும் பெறுகின்றனர். இதேபோன்று ஒருநாள் போட்டிக்கு 3485 அமெரிக்க டொலர் மற்றும் 4030 அமெரிக்க டொலர்களையும் பெற்றுக் கொள்வார்கள். இலங்கைப் பணப் பெறுமதியில் ஒரு அமெரிக்க டொலர் ஏறத்தாழ நூற்று மூன்று ரூபாவாகும். அப்படியாயின் கிரிக்கெட் வீரர்களின் வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்த்துக் கொள்ளுங்களேன்.

–சர்மிளா.

# மாறியது நெஞ்சம்: மாறியது யாரோ!

சிம்பாப்வே மற்றும் பங்களாதேஷ் அணிகள் தற்போதைய நிலையில் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற நாடுகளின் தர வரிசையில் மிகக் கீழ் நிலையில் உள்ளன. சிம்பாப்வே அணி வீரர்களின் வெளியேற்றத்தைத் தொடர்ந்து தைபு தலைமையில் புதிய அணி உருவாக்கப் பட்டாலும் அது டெஸ்ட் தரத்தைத் தாக்குப்பிடிக்க முடியாத நிலையில் இந்த வருட முடிவு வரை டெஸ்ட் போட்டிகளில் விளையாடுவதில் இருந்து தடுத்து வைக்கப்பட்டிருந்தது.



டேவ் வட்மோர்
உங்களுக்கும் காலம் வரும்

இன்னொருபுறம் பங்களாதேஷ் அணியை நிமிர்த்திவிடலாம் என்ற நம்பிக்கையில் பிரபல்யமான பயிற்றுனர் டேவ் வட்மோரை நியமித்தும்கூட மிகச் சில சந்தர்ப்பங்களில வித்தியாசம் காட்டினாலும் மொத்தத்தில் அபிவிருத்தியடைய முடி யாத அணியென்ற நிலையிலேயே இருக்கிறது. இந்த நிலையில் இந்த இரண்டு அணிகளும் ஏனைய அணிகளில் இருந்து வித்தி யாசப்படுத்திக்காட்டப் படவேண்டிய நிலையே ICCக்கு ஏற்பட்டுள்ளது. இந்தவகையில் தத்தம் நாட்டில் மட்டும் சிறிதுகாலம் வெளிநாட்டு அணிகளைச் சந்திக்கலாம் என்ற முறையொன்றைப் பின்பற்றலாம் என்றொரு முடிவை ICC எடுத்திருக்கிறது. தம் நாட்டிலேயே விளை யாடுவதிலுள்ள சாதகம், இயல்பாகவே பழக்கப்பட்டுவிட்ட மைதானங்களில் தம் தரத்தைக் கூடுதலாக வெளிப்படுத்தும் வாய்ப்பு அதிகமாகவே இருக்கும். பாதகமான அம்சம் – வெவ்வேறு நாடுகளின் களங்களுக்கு காலநிலைக்கு வித்தியாசமான சூழலுக்கு இசைவாக்கம் பெறுவதோடு அந்தச் சூழலில் உலகின் அதி சிறந்த வீரர்களைச் சந்திக்கும் வாய்ப்பை இழப்பது.

ICC தலைவர் இஷான் மாணி கருத்துக் கூறுகையில் – டெஸ்ட் அந்தஸ்திலிருந்து இரண்டு நாடுகளையும் தற்காலிகமாக நிறுத்தி வைப்பது என்று அடிபடும் பேச்சை முற்றாக மறுத்தார். இருந்தாலும் கூடக் காலத்துக்குக் காலம் மிகக் கடுமையான தரக் கணிப்பு முறை களைப் பின்பற்றவேண்டிய தேவை ஏற்பட்டுள் ளது. எதிர்காலத்தில் சர்வதேச டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டிகள் தொடர்பில் பலவித மாற்றங்களை ஏற்படுத்தவுள்ளதாகவும், இது விளையாட்டின் தரத்தை உயர்த்தவும் அவசியம் என்கிறார்.

தற்போது சிம்பாப்வே, பங்களாதேஷ் அணிகள் மீது மேற்கொள் ளத் திட்டமிட்டுள்ள நடவடிக்கையில் இந்த இரு நாடுகளுக்கும் எதிர் பார்த்த நன்மைகளைவிடப் பாதகமே மேலும் அதிகரிக்கும் என்பது பல விமர்சகர்களின் கருத்து. ஏனெனில் இவர்கள் டெஸ்ட் ஆடும் நாட் களைவிட ஓய்வாக இருக்கும் மாதங்கள் அதிகமாக இருக்கப் போகிறது. இது இன்னும இன்னும் மந்த நிலையை நோக்கியே இந்த அணிக ளைக் கொண்டு செல்லும்.

பல்வேறு புதிய மாற்றங்கள் என்று பேசப்படும்போது ICC நடாத் தும் சர்வதேசப் போட்டிகள் பற்றியும் சிந்திக்கத் தோன்றுகின்றது. நடந்து முடிந்த ICC கிண்ணப் போட்டிகளில் கலந்து கொண்ட நாடுகள் திட்டவட்டமாக இரண்டு வகைகளுக்குள் அடங்கி இருந் தன. இதிலும் இரண்டாம்வகை நாடுகள் மிகக் குறைந்த தரத்தைக் கொண்டிருந்த தோடு போட்டிகளின் சுவாரஸ்யத்தையே குறைத்துவிட்டது. எனவே புதிய மாற்றங் கள் ஏற்படுத்தப்படும் போது இவற்றையும் ICC கருத்தில் கொள்ளத் தவறாது என்று நம்பலாம்.



இஷான் மணி
சரியாகச் செய்தல் நன்று

–ஜெயா.

விளையாட்டு அரங்கம்




# தியாகி திலீபன் மருத்துவசேவையால் 18 ஆயிரத்து 656 பேருக்கு சிகிச்சை

தியாக தீபம் திலீபன் மருத்துவ சேவையினரால் கடந்த செப்ரெம்பர் மாதம் - 12 மருத்துவ சிகிச்சை நிலையங்களில் சிகிச்சை வழங்கப் பட்டது.

இதில் - கற்சிலைமடு பிரதேசத் தில் 3 ஆயிரத்து 468 பேரும், மாங்குளம் பிரதேசத்தில் 3 ஆயி ரத்து 303 பேரும், ஆழியவளைப் பிரதேசத்தில் 2 ஆயிரத்து 78 பேரும், அளம்பில் பிரதேசத்தில் ஆயிரத்து 860 பேரும், பூநகரி பிரதேசத்தில் ஆயிரத்து 832 பேரும், புளியங்குளத்தில் ஆயி ரத்து 687 பேரும், புங்குடுதீவு பிரதேசத்தில் ஆயிரத்து 542 பேரும் சிகிச்சை பெற்றுள்ளனர்.

மற்றும் அடம்பன் பிரதேசத்தில் ஆயிரத்து 251 பேரும், ஐயங் குளம் பிரதேசத்தில் ஆயிரத்து 181 பேரும், கதிரவெளிப் பிரதேசத்தில் ஆயிரத்து 40 பேரும், பாட்டாளிபுர பிரதேசத்தில் 3 ஆயிரத்து 3 பேரும், நைனாமடுவில் 404 பேரு மாக மொத்தம் - 18 ஆயிரத்து 656 நோயாளிகள் சிகிச்சை பெற் றுள்ளனர்.

இவர்களுள் - சுவாசப்பாதை தொற்றால் 3 ஆயிரத்து 500 பேரும், வைரஸ் காய்ச்சலால் 3 ஆயிரத்து 615 பேரும், இடுப்பு வலியால் 2 ஆயிரத்து 230 பேரும், காயங்களால் 202 பேரும் தோல் நோயால் 809 பேரும், பல் நோயால் 267 பேரும், நெருப்புக் காய்ச்சலால் 8 பேரும், காது நோயால் 105 பேரும், கண் நோயால் 110 பேரும், வயிற்றோட்டத்தால் 293 பேரும், வலிப்பால் 187 பேரும், குடற்புழுத் தொற்றால் ஆயிரத்து 879 பேரும் பாதிப்படைந்தவர்களாவர்.

இதய நோய்களால் 54 பேரும், குருதிச் சோகையால் 326 பேரும், குடற்புண்ணால் 278 பேரும், ஒவ் வாமையால் 570 பேரும், நாய்க் கடியால் 96 பேரும், பாம்புக் கடியால் 20 பேரும், உயர்குருதி அமுக்கத்தால் 330 பேரும், கச நோயால் 591 பேருமாகச் சிகிச்சை பெற்றுள்ளனர்.

இந்த நடமாடும் சேவை 30 இடங்களில் இடம்பெற்றது.

இந்த நடமாடும் சேவை தேவா அன்ரி தலைமையில் வழங் கப்பட்டு வருகிறது.

## மன்னார் மாவட்டத்தில் 40 வீடுகள் அமைப்பு

மன்னார் மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் புதிய வீடுகள் அமைக்கப்பட்டு வருகின் றன.

1999 ஆம் ஆண்டு இராணு வத்தால் மேற்கொள்ளப்பட்ட ரண கோஷ நடவடிக்கையின் மூலம், இந்த மாவட்டத்தின் சொர்ணபுரி, புளியங்குளம் ஆகிய பகுதிகளில் 100 இற்கும் மேற்பட்ட வீடுகள் அழிக்கப்பட்டன.

தற்போது தமிழர் புனர்வாழ்வுக் கழகம் இந்தப் பகுதிகளில் மீளக் குடியேறிய மக்களுக்கு, 40 புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றது.

## மணவாளன்பட்டமுறிப்பு குளம் புனரமைப்புப் பணி

முல்லைத்தீவு - மணவாளன பட்டமுறிப்புக்குளத்தில் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், தற்போது பெய்துவரும் மழை நீரைத் தேக்கமுடியாத நிலை காணப்படுகிறது.

1997 ஆம் ஆண்டு இராணு வத்தினர் மேற்கொண்ட ஜெயசிக் குறு படை நடவடிக்கையின்போது, இந்தக் குளத்தின் அணைக கட்டுக் கள் சேதமடைந்துள்ளன. இதன் புனரமைப்புப் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதனால் எதிர்காலத்துக்குத் தேவையான மழைநீரைத் தேக்கி வைக்க முடியாதநிலை காணப் படுகிறது.

## விவசாய உள்ளீடுகள் வழங்கல்

குமுழமுனைப் பிரதேசத்தில் அண்மையில் 115 விவசாய பயனாளிகளுக்கு விவசாய உள் ளீடுகள் வழங்கப்பட்டன.

குமுழமுனை விவசாயப் போத னாசிரியர். தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் - தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர், மற்றும் குமுழ முனை கிராம அலுவலர் தெய் வேந்திரன் ஆகியோர் கருத் துரைகளை வழங்கினர்.

விவசாய உள்ளீடுகள் வழங் கப்பட்ட 115 பயனாளிகளுள் 10 முஸ்லீம் விவசாயிகளும் அடங்கு வர்.

# முல்லைத்தீவு பிரதேசத்தில் மழலைகளுக்கான கனிவிப்பூங்கா அமைப்பதற்கான அடிக்கல்

முல்லைத்தீவு பிரதேசத்தில் மழலைகளுக்கான கனிவிப் பூங்கா அமைப்பதற்காக அடிக்கல் நாட் டப்பட்டது.

தமிழீழ மாணவர் அமைப்பின் ஏற்பாட்டில் நிகழ்ந்த இந்த நிகழ்வு- தமிழீழ மாணவர் அமைப்பின் பொறுப்பாளர் நளன் தலைமை யில் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் மழலைகள் கல்விப்பூங்கா கட்டடத்துக்கான அடிக்கல்லை தமிழீழ அரசியற் துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ நிர்வாக சேவைப் பொறுப்பா ளர் முரளி, முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சே.முகுந்தன், கரைதுறைப்பற்று விசேட ஆணையாளர் கிருஸ்ண பிள்ளை ஆகியோர் நாட்டிவைத்த னர்.

# ஈழப்பிரியா ஞாபகார்த்தமாக நேற்று கராத்தே சுற்றுப்போட்டி

(கிளிநொச்சி)

மேஜர் ஈழப்பிரியா ஞாபகார்த் தமாக, கராத்தே சுற்றுப்போட்டி கிளிநொச்சி தூயவன் அரசறிவி யல் கல்லூரியில் நேற்றுக் காலை 10 மணிக்கு தமிழீழ விளையாட் டுத்துறை இணைப்பாளர் இன்பன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வின் பொதுச்சுடரை தமிழீழக் கராத்தே சம்மேளனத் தலைவர் ரட்ணசோதி ஆசிரியர் , தமிழீழ அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், ஆகி யோர் ஏற்றி வைத்தனர்.

மேஜர் ஈழப்பிரியாவின் திரு வுருவப்படத்துக்கான ஈகச் சுடரை யும், மலர் மாலையையும் அவரது பெற்றோர் ஏற்றிவைத்தனர்.

தொடர்ந்து ஆசியுரையை தமிழீழ விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் பாப்பா நிகழ்த்தி னார்.

போட்டி பற்றிய அறிமுக உரையை கராத்தே சம்மேளனத் தலைவர் ரட்ணசோதி ஆசிரியர் நிகத்தினார்.

தொடர்ந்து போட்டிகள் இடம் பெற்றன. இதில் தமிழீழத்தின் எட்டுமாவட்ட கராத்தே அணிகள் கலந்து கொண்டுள்ளன.

இந்தப் போட்டி இன்றும் இடம் பெறவுள்ளது.

## பற்றைகளால் மூடிக் காணப்படும் வதிகள்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - ஜெயபுரத்தி லுள்ள சிறு வீதிகள் இருமருங் கிலும் பற்றைகள் நிறைந்து வீதியை மூடிக் காணப்படுகிறன.

இதனால் இந்த வீதிகளுடாகப் பிரயாணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வரு கின்றனர்.

# வவுனியா குடாகச்சைகொடி பிரதேசத்தில் கண்ணிவெடி அகற்றப்பட்டு வருகின்றது

(வவுனியா)

வவுனியா குடாகச்சைகொடி பிரதேசத்தில் இராணுவத்தினர் மேற்கொண்ட படை நடவடிக் கையின்போது, புதைக்கப்பட்ட கண்ணிவெடிகளை - இராணுவத் தின் கண்ணிவெடி அகற்றும் பிரி வினர் அகற்றி வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தின் எல் லைப்புறத்தில் இராணுவ நட வடிக்கையின்போது, இராணுவத் தால் இந்தக் கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டமை குறிப்பிடத்தக் கது.

தற்போது மக்கள் விவசா யத்தை இந்தப் பிரதேசத்தில் மேற்கொள்வதற்காகவே கண்ணி வெடிகள் உரியமுறையில் அகற் றப்படுகின்றது என - இராணுவ கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்தப் பிரதேசத்தில் அண் மையில்தான் மக்கள் மீளக் குடி யேறியுள்ளனர் என்பது குறிப் பிடத்தக்கது.

# இயக்கச்சி பொதுச்சந்தையை புனரமைத்து தரக் கோரிக்கை

(பச்சிலைப்பள்ளி)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட இயக்கச்சி பொதுச்சந்தை - இன்னமும் புனர மைக்கப்படாமல் இருப்பதால், இந் தப் பகுதி விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களைச் சந் தைப்படுத்துவதில் பல்வேறு சிர மங்களை எதிர்நோக்கி வருகின்ற னர்.

இந்த விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களைப் பளை, கிளிநொச்சி போன்ற சந்தைகளுக் குக் கொண்டுசெல்கின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் மக்கள் மீளக்குடியேறி இரண்டு வருடங் களுக்கு மேலாகிவிட்டது.

எனவே இந்தப் பிரதேச விவ சாயிகளின் பிரதான சந்தையாக விளங்கும் இயக்கச்சி பொதுச் சந்தையைப் புனரமைத்துத் தரு மாறு, அந்தப் பகுதி மக்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை யினரிடம் கோரிக்கை விடுத்துள் ளனர்.

(122)

## புனரமைப்பு செய்யப்படாத உப அஞ்சல் அலுவலகம்

(முல்லைத்தீவு)'

முல்லைத்தீவு - முத்தையன் கட்டு உப அஞ்சல் அலுவலகம் போரால் சிதையுண்ட கட்டடத்தி லேயே இயங்கி வருகிறது.

கடந்த காலங்களில் இடம் பெற்ற போரின் நடவடிக்கைகளால், இந்த உப அஞ்சல் அலுவலகம் பலத்த பாதிப்புக்குள்ளாகியுள் ளது.

எனினும் இந்த அஞ்சல் அலு வலகம் - இதுவரையில் புனரமைப் புச் செய்யப்படாத நிலையிலேயே இயங்கி வருகிறது.

இதேவேளை, தற்போது பெய்து வரும் மழையால் அஞ்சல் அலுவலகப் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள தாக அஞ்சல் அலுவலக வட்டா ரங்கள் தெரிவித்தன.

# மாவீரர் நாளை முன்னிட்டு சிரமதானப் பணிகள்

(மன்னார்)

மன்னார் - பிரதேசத்தில் மாவீரர்நாளை முன்னிட்டு அடம்பன் மகாவித்தியாலயத்தில் சிரமதா னப் பணிகள் கடந்த செவ்வாய்க் கிழமை மேற்கொள்ளப்பட்டன.

இந்தச் சிரமதானப் பணியை பாடசாலையின் அதிபர், ஆசிரி யர்கள், மாணவர்கள், பெற்றோர் இணைந்து மேற்கொண்டனர்.

இதேபோன்று மன்னார் மாவட் டத்தில் பிரதேச ரீதியாகவும், முல்லைத்தீவு மாவட்டங்களில் பல பிரதேசங்களிலும் மாவீரர் நாளை முன்னிட்ட சிரமதானப் பணிகள் பொது மக்களால் மேற்கொள்ளப் படுவதைக் காணமுடிகிறது.

# காணி சம்பந்தமான கலந்துரையாடல்

கிளிநொச்சி - பூநகரி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் காணி சம்பந்தமான மக்கள் கலந்துரையாடல், கடந்த வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு பூநகரிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் - வீதிகளுக்குரிய காணி வழங்கல், விவசாய அமைப்புக்களின் காணி சம்பந்தமான பிரச்சினைகள் போன் றவை விரிவாக ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் - கிளிநொச்சி மாவட்ட தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் பொறுப்பாளர் சேந்தன், கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன், காணி அலுவலர் எனப் பலரும் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கினர்.

# மக்கள் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்

(பூநகரி)

பூநகரிப் பிரதேசத்தில் கடற்புலிகளின் அரசியற்துறையால், மக்கள் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல் - கடந்த வியாழக்கிழமை பூநகரி மகா வித்தியாலய மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மன்னார் மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர், பூநகரி அரசியற்துறைப் பொறுப்பாளர், பூநகரி கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் ஆகியோர் கருத்துரைகளை நிகழ்த்தினர்.

# மன்னார் வலயப் பாடசாலைகளில் கணினி அறிமுகப் பயிற்சிப் பட்டறை

(மன்னார்)

மன்னார் மாவட்ட மடு வலயத் துக்கு உட்பட்ட பாடசாலைகளுக் கான கணினி அறிமுகப் பயிற்சிப் பட்டறை நேற்றுமுன்தினம் அடம் பன் மத்திய மகா வித்தியாலயத் தில் இடம்பெற்றது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில், மாந்தை மேற்குப் பாடசாலை மாணவர்களுக்கும், பெரிய பண்டி விரிச்சான் பாடசாலை மாணவர்க ளுக்கும் நடைபெற்ற இந்தப் பயிற் சிப் பட்டறையில் - மடு கோட் டத்துக்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களும் பங்குபற்றினர்.

வன்னி 'ரெக்' நிறுவனத்தால் நடத்தப்பட்ட பயிற்சிப் பட்டறைக் கான ஏற்பாடுகளை மன்னார் மாவட்ட மாணவர் அமைப்பு, மடுக் கல்வி வலயக் கல்வித் திணைக் களம் என்பன இணைந்து ஒழுங் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழீழ மாவீரர் நாள் ஏற்பாடுகள் குறித்து சகல அமைப்புகளுக்குமான கலந்துரையாடல்

தமிழீழ மாவீரர்நாளை முன் னிட்டு, வலய ரீதியாகச் சகல அமைப்புகளுக்குமான கலந்துரை யாடல் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதில் துணுக்காய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சகல அமைப்புகளுக்குமான கலந்துரையாடலில், கருத்துரை யைத் துணுக்காய் வலயப் பொறுப்பாளர் ஈழக்கனி நிகழ்த் தினார்.

இதில் மாதர் சங்கங்கள், விவசாய அமைப்புக்கள், ஊரக தேசிய எழுச்சிப்பேரவை, ஆலய பரிபாலனசபை போன்ற அமைப் புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஒட்டுசுட்டான் பிரதேச மட்டக் கலந்துரையாடலில், அன்றைய தினம் மாலை 2 மணிக்கு நடை பெற்றது.

ஒட்டுசுட்டான் பிரதேசத்திலுள்ள அரச சார்பற்ற அமைப்புகளின் பிரதிநிதிகளும் மற்றும் பல பொது மக்களும் கலந்து கொண்டனர்.

கடந்த வருடத்திலும்பார்க்க, இந்த வருடம் எழுச்சியுடன் கொண்டாடுவதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இதில் மாவீரரின் பெற்றோர் கௌரவிப்பு, மரம் நடுகை, சிரம தானப்பணி போன்ற நிகழ்வுகளை நிகழ்த்துவதற்கு ஏற்றவாறு ஏற் பாட்டுக்குழு தெரிவு செய்யப் பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் பிரதேசமட்டக் கலந்துரையாடலில் கருத்துக் களை ஒட்டுசுட்டான் பிரதேச செய லர் சுபாசினி கந்தையா, ஒட்டு சுட்டான் கோட்டப் பொறுப்பாளர் ஆகியோர் நிகழ்த்தினர்.

நமது ஈழநாடு

267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

சிந்தனைக்கு

*புறம்கூறிப் பொய்த்உயிர் வாழ்வதலின் சாதல்*
*அறம்கூறும் ஆக்கம் தரும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## விடுதலைப் புலிகளையும் வீரப்பனையும் இணைக்க முயலும் விஷமத்தனம்

சந்தனக் காட்டுச் சிறுத்தையெனத் தமிழக ஊடகங்கள் சிலவற்றாலும், சந்தனக் கடத்தல் வீரப்பன் என்று தமிழக, கர்நாடக அரசுகளாலும் வர்ணிக்கப்பட்ட அந்தப் பிரசித்திபெற்ற மனிதனின் கதை எப்படியோ ஒருவாறு அவன் படுகொலை செய்யப் பட்டதன் மூலம் முடிவுக்கு வந்துவிடும் என்று எண்ணிக் கொண்டிருக்கையில் - வீரப்பனின் கொலை தொடர்பான நடவடிக்கைகளின் பின்னணி குறித்து நாளுக்கொரு கதையைக் கட்டவிழ்த்து வரும் தமிழக - கர்நாடக காவல் துறையினர் மற்றும் தமிழக அதிரடிப்படையினர் தம்முடைய சாதனை (!?) குறித்த வீரப்பிரதாபங்களை மிக அற்புதமான கற்பனைகளுடன் பிரசாரம் செய்யத் தீவிரம் காட்டி வருவதாகவே தெரிகிறது.

மிகமிகச் சாதாரணமான - கல்வியறிவற்ற மனிதனாக வீரப்பன் தனது பெயருக்கேற்ப தமிழக - கர்நாடக காட்டுப் பகுதிக்குள் நடத்திவந்த ஒரு விதமான ஆட்சி குறித்த கதைகள் ஏராளம் உண்டு....

இதில் அரசதரப்பினர் - வீரப்பன் குறித்து கூறி வந்த மிகைப்படுத்தப்பட்ட குற்றச்சாட்டுக்கள் அவனைப் பெரும் பயங்கரவாதத்தன்மை கொண்ட, இரக்கமற்ற கடத்தல்காரனாக, கொள்ளைக் காரனாக, கொலைகாரனாகப் பிரசாரப்படுத்துவதையே இலக்காகக் கொண்டிருந்தன என்பதும் உண்மையே.

இதேவேளை வனப்பிரதேசம் வாழ்மக்களுக்கு அவன் ஒரு வீரசாகசம் புரிந்து - அரசுகளுக்கும் அரசுகளின் படைகளுக்கும் 'கண்ணாமூச்சி' விளையாட்டுக் காட்டுபவனாகவும், அதிரடிப் படையினர், வன இலாகா அதிகாரிகள் போன்றோர் தங்கள் மீது மேற்கொள்ளும் மனித நேயமற்ற அராஜகங்களுக்குப் பதிலடி கொடுக்கும் ஆற்றல்மிகு வீரனாகவுமே தென்பட்டிருக் கிறான். இதன் காரணமாகவே இரு பெரும் அரசுகளும் (தமிழக - கர்நாடக) அவற்றின் பலம்மிக்க காவல் துறையினர் மற்றும் அதிரடிப்படையினரும் இருதசாப்பதத்திற்கும் மேலான காலம் வீரப்பனைப்பிடிக்க எடுத்த பல்வேறு தரப்பட்ட நடவடிக் கைகள் படுதோல்வியில் முடிவடைந்தன எனலாம்.

பொதுவாகவே தமிழக - கர்நாடக காவல்துறையினரதும், சிறப்பு அதிரடிப்படையினரதும் 'பெருமைகள்' எவ்வளவு அசிங்கமானவை என்பதை கடந்த இருதசாப்தகால அவர்கள் குறித்த ஊடகச் செய்திகளைத் தொடர்ந்துபடித்து வந்திருப்போர் புரிந்துகொள்வர்.

அவர்களின் செயற்பாடுகள் எந்தளவுக்கு சாமானிய மக்களின் மனிதஉரிமைகளை உதாசீனம் செய்துவந்துள்ளது என்பதை வார்த்தைகளால் வர்ணிப்பது கடினம்.

இலங்கையில் இந்தியப் படையின் ஆக்கிரமிப்புக் கால நிகழ்வுகளை மீள நினைவுக்குட்படுத்தினால் இதனை சுலபமாகப் புரிந்து கொள்ளமுடியும்.

இந்தச் சூழலில் வீரப்பனின் குறிக்கு இலக்கானவர்கள் மக்கள் விரோத காவல்துறை - வனத்துறை மற்றும் அதிரடிப் படை அதிகாரிகளும் படையினரும் அவர்களுக்கு எடுபிடியாக விளங்கியோரும்தான் என்பதை தமிழக பத்திரிகைகளில் வெளியான வீரப்பன் குறித்த கட்டுரைகள், செய்திக்ள் மற்றும் தகவல்கள் தெளிவாகத் தெரிவிப்பதாக உள்ளன.

வீரப்பனின் செயல்கள் சரியானவையென்றோ, நியாயமானவையென்றோ நிரூபிப்பது எமது நோக்கமில்லை. அது தேவையுமில்லை. வீரப்பனின் சடலத்துக்கு பொதுமக்கள் 'சலாம்' போட்டு நின்றார்கள் என்ற ஊடகச் செய்திகள் பலவிடயங்களைப் பூடகமாகவும் - சில விடயங்களைத் தெளிவாகவும் உணர்த்துவதாகவும் உள்ளன அல்லவா? இது தமிழக - கர்நாடக அரசுகளுக்கும் வீரப்பனைக் கொன்ற அதிரடிப் படையினருக்கும் தலைகுனிவை உண்டாக்கும் விடயம் என்பதில் ஐயமில்லை. இதுநிற்க, வீரப்பன் குறித்து கடைசியாக வெளிவந்த தகவல் இல்லை அதிரடிப்படையினர் அவிழ்த்து விட்டுள்ள கட்டுக்கதைதான் கோமாளித்தனமானதும் எரிச்சலூட்டுவதானதுமாகும்.

விடுதலைப் புலிகளிடம் பாதுகாப்பாக கொண்டுபோய் விடுவதாகக் கூறியே - காட்டிலிருந்து வீரப்பனை அழைத்து வந்தே அவனைக் கொன்றார்களாம் அதுவும் தேசியத்தலைவர் பிரபாகரனின் கட்டளைப்படியே அவனை அழத்துக் கொண்டு போக வந்ததாக வீரப்பனிடம் தெரிவித்தே அவனை ஏமாற்றி அழைத்துவந்தார்களாம் எப்படி 'றீல்' விடுகிறார்கள்?

வீரப்பனுக்கும் - விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பு இருந்தது அதனால்தான் வீரப்பன் தங்களின் கதையை நம்பி வெளியே வந்தான் என்று - தமிழகமக்களை நம்பவைக்க அதிரடிப் படையினர் முயல்வது அப்பட்டமாகத் தெரிகிறது.

அப்படியானால் வீரப்பனையும் அவனது நண்பர்களையும் மிகச்சுலபமாக கைது செய்திருக்கலாமே.... அல்லது சிறுகாயங்களுடனாவது பிடித்திருக்கலாமே!

உண்மையில் வீரப்பனின் தொடர்புகள் யாருடன் இருந்தது யார் அவனை நினைத்துப்பயந்து கொண்டிருந்தார்கள் என்பது மக்களுக்கு தெரியாததல்ல... வீரப்பனின் கொலையால் நிம்மதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருப்போர் தமிழகத்திலும் கர்நாடகத்திலும் தான் அதிகம் இருக்கக்கூடும்.

வீரப்பனின் கொலையுடன் விடுதலைப்புலிகளை இணைத்து அவர்களுக்கும் அவனுக்கும் தொடர்பு இருந்ததாக பிரசாரம் செய்ய முயல்வதை - யாரும் காதில் பூச்சுற்றியர்வர்களாகப் பார்த்துச் செய்வதே நல்லது என்றே கூறவிரும்புகிறோம்.

# நாடும் நடப்பும்

செய்தி:- இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு கட்சிகளிடம் இணக்கப்பாடு இல்லை. - சுவீடன் வெளியுறவுச் செயலர் தெரிவிப்பு



# புலிகளுக்கு எதிராக பேசமுடியுமா என அரசாங்கத்திடம் கேட்க முடியுமா?

## ஜே.வி.பியிடம் கஜந்த கருணாதிலக கேள்வி

முடிந்தால் புலிகளுக்கு எதிராக ஒரு சொல்லை யேனும் கூறுமாறு ரணில் விக்கிரமசிங்கவிடம் கேட்கும் விமல் வீரவன்ச, புலிகளோடு சமாதானப் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக இரு கரங்களையும் நீட்டியுள்ள ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தலைமையிடம் ஏன் அவ்வாறானதொரு வேண்டுகோளை விடுக்கவில்லை என, ஐக்கிய தேசியக் கட்சியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜந்த கருணாதிலக விசேட அறிக்கையொன்றின் மூலம் ஜே.வி.பியிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜே.வி.பியின் பிரசாரச் செயலர் விமல் வீரவன்ச வெளியிட்டுள்ள அறிக்கைதொடர்பாக பதிலளிக்கும் வகையிலேயே அவர் இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு வைத்திய வசதிகள் மற்றும் போக்குவரத்துக்கென ஹெலி கொப்ரர் வசதிகள் வழங்கியிருப்பது விமல் வீரவன்ச கூட்டுச்சேர்ந்திருக்கும் கட்சிதான்.

விமல் வீரவன்ச தொங்கிக்கொண்டிருக்கும் கட்சியின் தலைவியும் இதுவரை ரணில் விக்கிரமசிங்கவின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டு, சமாதான செயற்பாட்டுக்கான முன்னெடுப்புக்களில் ஈடுபட்டுக்கொண்டிருப்பதை விமல் வீரவன்ச நன்றாகத் தெரிந்து கொள்ளவேண்டியுள்ளது.

முடிந்தால் விடுதலைப் புலிகளுக்கு எதிராக ஒரு சொல்லையேனும் வெளிப்படுத்துமாறு ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரியுள்ள ஜே.வி.பியினர் - ஜனாதிபதி சந்திரிகாவிடம் அதனைக்கோராமல் இருப்பது ஆச்சரியமாகவே உள்ளது. அவர் தொங்கிக்கொண்டிருக்கும் கூட்டமைப்பின் மூலமே புலிகளுக்குத் தேவையானவை அனைத்தும் வழங்கப்பட்டுக் கொண்டிருப்பது மறந்துவிடக்கூடாது.

ஆகவே சமாதான மேசைக்கு வருமாறு அழைப்பு விடுகின்ற விடுதலைப் புலிகளை ஏற்றுக்கொள்வதோ, நிராகரிப்பதோ அதிகாரத்தில் உள்ளவர்களின் கைகளில் தான் உள்ளது.

ஐக்கிய இலங்கைக்குள் அதிகாரத்தில் பங்கிடும் இராணுவத்தின் தீர்வை நோக்கிச் செல்வதென்றால், பேச்சுவார்த்தை ஆரம்பமாகவேண்டும். அனைத்தையுமே ஏற்றுக்கொள்ள முடியாவிடினும், இடைக்கால நிர்வாக சபை ஆலோசனையை அடிப்படையாகக் கொண்டு, ஆலோசனைகளின் மீது, பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படவேண்டும். இந்த நாட்டில் மீண்டும் கொடிய யுத்தத்துக்கு இழுத்துச் செல்வதற்குப் பதிலாகக் குறைந்தது கூட்டமைப்பின் தலைவியின் நிலைப்பாட்டையாவது ஏற்றுக்கொண்டு, அதற்கு ஆதரவு தெரிவிப்பது இன்றைய காலத்துக்குரிய தேவையாகும். அதன்படி விமல் வீரவன்ச தெரியப்படுத்தியுள்ள நாடு இரண்டாகப் பிளவுபடுவதைத் தடுப்பது, இன்று கூட்டமைப்பின் பங்காளியான விமல் வீரவன்சவின் வரலாற்றுக் கடமையாகவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கையின் கல்விமுறை தொடர்பாக வெளியான செய்திக்கு மறுப்பு

இலங்கையின் கல்விமுறையை தனியார் மயப்படுத்தப்படுவதன் பின்னணியில், உலக வங்கி இருப்பதாக வெளியான குற்றச்சாட்டை உலக வங்கியின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி பீற்றர் ஹரால்ட் மறுத்துள்ளார்.

இலங்கையின் கல்வி அமைப்பைத் தனியார் மயப்படுத்துவது தொடர்பில் உலக வங்கி எந்தவிதமான முன்னெடுப்புக்களையும் மேற்கொள்ளவில்லை.

இலங்கையின் கல்வி அமைப்பை தனியார் மயமாக்கும் நடவடிக்கைக்கு உலக வங்கி ஒத்துழைப்பை வழங்குவதாக பல்கலைக்கழக மாணவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பீற்றர் ஹரால்ட் இது ஆதாரமற்ற குற்றச்சாட்டு என்று கூறியுள்ளார். நாட்டில் நல்ல பிரஜைகளை உருவாக்குவதற்குத் தேவையான கல்வி வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் கல்வி நிலையங்கள் மாற்றப்பட வேண்டும் என்பதே உலக வங்கியின் நிலைப்பாடு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மனிதவள அபிவிருத்தியில் இலங்கை 96 ஆவது இடத்தில்

ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித வள அபிவிருத்திச் சுட்டெண் பட்டியலில் இலங்கை 96 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது.

உலகம் முழுவதிலும் உள்ள 177 நாடுகளுக்குள்ளே இலங்கை கடந்த வருடம் 99 ஆவது இடத்தை வகித்தது.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் - இலங்கை மனித வள அபிவிருத்தியில் ஒப்பட்டளவிலான வளர்ச்சியைக் கொண்டுள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் 2004 ஆம் ஆண்டுக்கான அறிக்கை தெரிவிக்கின்றது.

எனினும், 2002 ஆம் ஆண்டு இலங்கை 89 ஆவது இடத்தைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டம் வருடந்தோறும் வெளியிடும் உலகமனித அபிவிருத்தி தொடர்பான 2004 ஆம் ஆண்டுக்கான அறிக்கை நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அமைப்பு மனித வள அபிவிருத்திச் சுட்டெண்னை கணிப்பிடும்போது, வாழ்க்கைச் செலவு அடிப்படையில் தனிநபர் வருமானம் எதிர்பார்க்கப்படும். ஆயுட் காலம், எழுத்தறிவு வீதம் என்பவற்றைக் கருத்திற் கொண்டே கணக்கிடப்படுகிறது.

# பத்து லட்சம் உல்லாசப் பயணிகளை இலங்கைக்கு வரவழைக்கத் திட்டம்

பத்துலட்சம் உல்லாசப் பயணிகளை 2010 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வரவழைக்கவும், அதனூடாக 1727 மில்லியன் அமெரிக்க டொலர்களை வருவாயாகப் பெறும் நோக்குடன், சுற்றுலா சபையும், சுற்றுலா அமைச்சும் செயற்படுகின்றன என அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

அடுத்த ஆண்டுக்கு அப்பாலும் சுற்றுலாத்துறைக்கான திட்டம் என்ற தலைப்பில் சுற்றுலாவை மேன்மைப்படுத்துவது தொடர்பான விரிவான செயற்திட்டங்கள் இதில் அடங்கியுள்ளதாக சுற்றுலாச் சபையின் தலைவர் நாணயக்கார, அமைச்சர் அநுராவிடம் செயற்றிட்டத்தின் பிரதியை கையளித்தபோது தெரிவித்தார். இந்தியா, சீனா, பிரிட்டன், போன்ற நாடுகளிலிருந்து பெருமளவில் சுற்றுலாப் பயணிகளை வரவழைக்கவும், சுற்று லாப் பயணிகளைக் கவரும் விதத்திலும 2005 ஆம் ஆண்டு சர்வதேச மட்டத்தில் மேள இசைவிழாவும், பலூன் விழா பெஷன்டி.வி வெசாக் பந்தல் விழா போன்றவற்றை நடத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டின் சுற்றுலா வருகையைவிட, இந்த ஆண்டு 11 வீதத்தால் அதிகரித்துள்ளது. இந்தத் தொகை 2005 ஆம் ஆண்டு 15 வீதமாக மாறும். அத்துடன், சுற்றுலாத் துறையில் மேலும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தவும், தற்போது இலங்கை வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு 14 ஆயிரம் அறை வசதிகளே உள்ளன. இந்த நிலை 2006 ஆம் ஆண்டில் 16 ஆயிரமாக அதிகரிக்கப்படும்.

2010 ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் ஒரு மில்லியன் சுற்றுலாப் பயணிகளுக்கு 25 ஆயிரம் அறைகள் தேவைப் படுகின்றன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அனுபவப் பகிர்வு... - எஸ். எம். ஜி.

# உயர உயரப் பறந்தாலும்... ஊர்க்குருவி ஊர்க்குருவிதான்

'நாஷனாலிற்றி (குடியுரிமை) எடுப்பது, ஒரு வீடுவாங்குவது' இதுவே இன்று புலம் பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் இலஙகைத் தமிழர்களில் சிலருக்கு (ஏன் பலருக்கு என்று கூடச்சொல்லலாம்) ஒரே குறிக்கோளாக இருக்கிறது.

இவர்கள் குடியுரிமை பெற்றதும், தங்களுக்கென்று ஒரு சொந்த வீடு வாங்குவதோடு திருப்திப்படுவதாக இல்லை. அண்ணன், தம்பி, மச்சான் என்று இவர்களின் உதவியால் அல்லது ஆலோசனையால் புலம்பெயர்ந்து வந்திருப்பவர்களின் இருப்பிடங்களுக்கும் சென்று அவர்களையும் எப்படியாவது சொந்தமாக வீடு வாங்கும்படி ஆலோசனை கூறிவருகின்றனர்.

வீட்டுக்கு நீங்கள் கொடுக்கும் வாடகையைக் கணக்குப் பார்த்தால், வீடுவாங்குவது எவ்வளவோ மிச்சம். வங்கியில் சுலபமாகப் பணம் கடன் எடுக்கலாம். நீங்கள் இங்கே இருக்க விருப்பமில்லாமல், நாட்டுக்குத் திரும்பவேண்டுமென்றால் அந்த நேரத்திலேயே கூடுதல் விலைக்கு வித்திட்டுப்போகலாம் என்றும் இவர்கள் ஆசை வார்த்தை கூறி சும்மா இருப்பவர்களையும் உசுப்பேற்றிவிடுவார்கள்.

ஜேர்மனியில் பிறீமன் என்ற இடத்தில் வசிக்கும் நமது தமிழீழத் தமிழ் மகன் ஒருவனிடம் பேசிக்கொண்டிருந்தபோது, அவர் கொட்டித்தீர்த்த ஆதங்கங்களில் மேற்கூறியவை ஒரு சிறு பகுதி-

கடன்பெற்றுக்கொடுப்பதற்கென்ற நிறுவனம் ஒன்று செயற்படுவதாக ஊடகங்களில் தினமும் விளம்பரம் செய்யப்படுகின்றது. ஒருவனைக் கடனாளியாக்குவதற்குப் பல வழிகளில் உதவி செய்ய சிலபேர் தயாராக இருக்கிறார்கள்.

### சீட்டுக்காசும், வட்டிக் காசும்

இவைபோதாதென்று கஷ்டப்பட்டு பனியிலும், வெயிலிலும் இரவும் பகலும் பாடுபடுகின்றவர்கள் நம் நாட்டிலிருந்து இங்கு சீட்டுக்கட்டும் முறையையும் சேர்த்திருக்கிறார்கள். சீட்டுப் பிடிப்பதும், சீட்டுக்கட்டுவதும் ஐரோப்பிய நாடுகளில் தடைசெய்யப்பட்டிருக்கிறது. இதற்கும் கணக்கட்டித்தைக் காட்டி சீட்டுப்பிடிக்கும் தொழிலும் நடந்து கொண்டு தானிருக்கிறது. என்று ஒரு நண்பர் சொன்னார். சீட்டுக்காசு குறித்த திகதியில் கட்டிவிடவேண்டும். தவணை தவறாமல் சீட்டுக்காசை வாங்கிவிடுவார்கள். ஆனால் சீட்டுக்காசு பெறுவதற்கு அலையவும் வேண்டும்.

ஒரு குடும்பத்தில் கணவனும், மனைவியும் வேலை செய்தால் தான், குடும்பத்தைக் கஷ்டமில்லாமல் நடத்தமுடியும். இவ்வளவு கஷ்டப்பட்டு உழைக்கும் பணத்தில் நாட்டிலிருந்து அம்மா, அப்பா, அண்ணன், தம்பி, தங்கை என்ற தங்கள் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதற்கும், பணம் கேட்டு அழுதழுது வேண்டிக்கொள்வார்கள். அவர்களுக்கு இங்கிருந்து அனுப்பும் பணம் அங்கே ஆடம்பரத்துக்காக வீணாகச் செலவு செய்யப்படுவதாக, இங்கு கிடைக்கும் தகவல்கள் சொல்லி மாளா. இங்கு பனிக்குளிரிலும், வெயிலிலும் கஷ்டப்பட்டு உழைப்பது அவர்களுக்குத் தெரியாது. இங்கிருந்து யூரோவிலும், ஸ்ரேலிங் பவுணிலும் அனுப்பப்படும் பணம் அங்கு ரூபாயாக மாறும்போது பெரிய தொகையாகக் கிடைக்கிறது. அவர்களுக்கு இது எவ்வளவு கஷ்டப்பட்டு உழைத்த பணம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள முடிவதில்லை.

### கலியாணப் பேச்சும் சீதனம் கொடுப்பதும்

இவை தவிர இங்குள்ள மாப்பிள்ளைக்கு அங்கு பெண் பார்ப்பார்கள். சீதனமாக அங்குள்ள வீடுவளவு இங்கு அந்தப் பெண்ணின் சகோதரன் அல்லது தகப்பன் அங்கும் இங்குமாகப் பெருந்தொகைப் பணத்தை சீதனமாகக் கட்டவேண்டும். அங்கிருந்து இங்கு கலியாணத்துக்கென அனுப்பப்படும் பெண் - மாப்பிள்ளையைப் பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் அவனைக் கட்டித்தான் தீரவேண்டும்.

கலியாணம் - புலம்பெயர்ந்த நாடுகளில் கோலாகலமாக நடக்கும். நாட்டில் ஊரில் எப்படி உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அழைப்பு விடுத்து நடக்குமோ அதேபோல் இங்கும் நடக்கவேண்டும்.

கலியாணச் சடங்கு விமரிசையாக ஊரில் போல் நடக்கும் மேளதாளம், மணவறை, தாலி, கூறை, ஐயர் எல்லாம் இங்கே இருக்கிறது. ஒரு கலியாணத்துக்கு சில இடங்களில் ஐயருக்கு மட்டும் ஐநூறு யூரோ கொடுக்கவேண்டும். இது நம்நாட்டில் குறைந்தது ஐம்பதாயிரம் ரூபா மதிப்பு.

### கலியாணத்தில் நகை அலங்காரம்

அந்தக்காட்சியைப் கட்டாயம் பார்க்க வேண்டும். வசதியான அம்மன் கோயிலில் அம்மனுக்கு எத்தனை நகைகள் போடமுடியுமோ, போட்டு அலங்கரிப்பார்கள். பட்டுச்சேலை மிக உயர்ந்த ஜரிகைகள் வைத்து ஏற்பட்டதாக இருக்கும். இந்த அம்மனுடைய அலங்காரத்தை விட, இங்கு நடைபெறும் கலியாணத்துக்கு வரும் பெண்கள் - அனைத்து நகைகளையெல்லாம் அணிந்து அலங்காரமாக பவனிவருவார்கள். தங்கமும், வைரமும், வைடூரியமும் கலியாணவீடே ஜொலிக்கும் என்றார் நண்பர்.

எங்கள் சடங்கு சம்பிரதாயமெல்லாம் கலியாணத்தில் தவறாமல் நடக்கும். கலியாணம் முடிந்ததும் மாலையில் ஐரோப்பிய முறையில் பெரிய கேக் வெட்டப்படும். பெரிய கேக் கொண்டு வந்து மணவறைக்கு முன்பாக வைப்பார்கள். மாப்பிள்ளையும், பெண்ணும் கேக்கை வெட்டி மாறிமாறி ஒருவர் வாயில் ஒருவர் கேக் துண்டுகளை ஊட்டிவிடுவார்கள். இதே சமயம் 'சம்பயின்' என்ற ஒரு வகை மதுபானப் போத்தலை உடைத்து நுரைக்க நுரைக்கத் தெளிப்பார்கள்.

பிரான்ஸ் தலைநகரில் பாரிஸிலிருந்து சுமார் ஐம்பது கிலோமீற்றர் தூரத்தில் எனது அயலில் வாழ்ந்த ஒரு இளைஞன் இருக்கிறார்.சிறு பையனாகப் பார்த்தபின் பல வருடங்களுக்குப்பின் அவனைச் சந்தித்தேன்.

நான் பாரிஸில் இருந்து வந்திருப்பதை அறிந்து, நான் தங்கியிருந்த மற்றொரு அன்பர் வீட்டுக்கு வந்து அந்த இளைஞன் என்னைத் தனது வீட்டுக்குக் கூட்டிச்சென்றான். புலம்பெயர் வாழ்க்கை பற்றி நிறையவே சொன்னான். குறைந்த வயதில் அவன் நிறைந்த அனுபவம் பெற்றிருப்பதை அறிந்தேன்.

தனது மக்களைத் தங்கள் தாய்மொழியில் கல்வியூட்டவேண்டும். தங்கள் சமய மரபுகளையும் பின்பற்றவேண்டும். அல்லது பிரெஞ்சு மொழியை அவர்கள் தங்கள் தாய்மொழியாக ஏற்று, அதேசமயம் கிறிஸ்தவ மதத்தையும் தங்கள் மதமாகப் பின்பற்றவேண்டும் இதில் எந்த வழிக்கு அவர்களைக் காட்டுவது என்ற சபலமும், சலனமும் அவருக்கு ஏற்பட்டது.

இது பற்றித் தமது நெருங்கிய பிரெஞ்சு நண்பர் ஒருவரிடம் ஆலோசனை கேட்டாராம். அதற்கு அந்த நண்பர் சொன்ன பதில்-

உமது பிள்ளைகள் பிரெஞ்சுமொழியை தாய்மொழி என்று சொல்லி ஏற்றுக்கொண்டாலும், கிறிஸ்தவ மதத்தையே தங்கள் மதமாக ஏற்றுக்கொண்டாலும், அவர்கள் ஒதுபோதும் பிரெஞ்சுக்காரர் ஆகமுடியாது. அவர்களுக்குத் தமிழ்பேசத்தெரியாவிட்டாலும், அவர்கள் தமிழர்கள் தான் என்பதை நினைவில்கொண்டு அவர்களுக்கு வழிகாட்டும் என்று சொன்னாராம்.

இதேசமயம் ஜேர்மனியில் மெஷடே என்ற பகுதியில் ஒஸ்லோ என்ற அழகிய சிற்றூரில் கடந்த சுமார் இருபது ஆண்டுகளாக தமிழீழத் தமிழ் அன்பர் ஒருவர் வாழ்ந்துவருகிறார். அவர் சொந்தமான ஒரு வீடு கட்டிவாழ்ந்து வருகிறார். மனைவி குழந்தைகளுடன் அந்தப் பகுதியில் ஒரு அந்தஸ்துடன் வாழ்பவர்.

ஜேர்மனியிலும் கடந்த பொதுத்தேர்தல் சமீபத்தில் நடந்திருந்தது. இந்தத்தேர்தலில் வாக்களிக்கும் உரிமை இவருக்கும் இருந்தது. அந்தத் தேர்தலில் -

வாக்களிப்புத் தினம் ஒரு ஞாயிற்றுக் கிழமை நடந்தது. அரசாங்க அலுவலகம் ஒன்றில் தான் அன்று தேர்தல் வாக்களிப்பு நடைபெற்றது.

இந்த அன்பர் அன்று வாக்களிப்பதற்காக அந்த அலுவலகத்தினுள் நுழைந்தார். உள்ளே சென்றார். அங்கு நின்ற ஒருவர் அதாவது அரச அதிகாரியொருவர் இந்த அன்பரிடம், "மன்னிக்கவும் இன்று ஞாயிற்றுக்கிழமை உங்களுக்குரிய சோஷல் பணத்தை(உதவிப் பணத்தை) எடுக்கமுடியாது. போய்விட்டு நாளை திங்கட் கிழமை வாருங்கள் என்று சொன்னாராம்.

இவர் என்னதான் குடியுரிமை, வாக்குரிமை பெற்றாலும் இவர் அகதிதான். ஜேர்மனியராக முடியாது. இப்படி புலம்பெயர் வாழ்வில் எத்தனை கசப்பான, சுவையான அனுபவங்கள்.

உயர உயரப் பறந்தாலும் ஊர்க்குருவி ஊர்க்குருவி தான். இதை மறந்துவிடக்கூடாது.

(தொடரும்)

நேர்காணல்... - கண்ணன்

# மருத்துவமுகாம்களை தொடர்ந்து நடத்தவேண்டும்!



கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரைக்கும் தீவக அரிமாக் கழகத்தின் ஆதரவில் யாழ்.பல்கலைக்கழக 4 ஆம் வருட மருவத்துவபீட, சமுதாய மருத்துவத்துறை மாணவர்களால் எழுவைதீவில் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் தீவுப்பகுதியில் உள்ள 80 சதவீதமான மக்கள் தங்கள் மருத்துவதேவையைப் பூர்த்தி செய்து கொண்டமையை நேரடியாகக் காணக்கூடியதாக இருந்தது. இதேவேளை அந்த மக்கள் மத்தியில் இவ்வாறான மருத்துவ முகாம்களும், நடமாடும் மருத்துவ சேவை நிலையங்களும் நடத்தப்படவேண்டும் என்ற கோரிக்கையே மேலோங்கி நின்றது.

அன்றைய மருத்துவமுகாமில் கலந்துகொண்ட மக்களில், சிலரிடம் இந்த மருத்துவ முகாம் தொடர்பாக அறிந்துகொள்ள எடுத்த முயற்சியால் அவர்கள் மனதில் இருந்து வெளியிடப்பட்ட கருத்துக்கள், உரியவர்களின் மனதைத் தொடவேண்டும் என்பதற்காக பகிர்ந்து கொள்கிறோம்.

**தி.சோதியம்மா**
**எழுவைதீவு - 01**

இன்று இந்த மருத்துவமுகாம் நடக்கிறது எங்களுக்கு மிகவும் சந்தோசமான விடயம். மருத்துவ வசதியில்லாத எங்களுடைய குறுகிய ஊருக்குள்ள இப்படியொரு மருத்துவ முகாம் நடக்கிறது. எங்களுக்கு ஒரு பெரிய உதவி. எங்களைப்போல வயது போனவர்கள் வெளியிடங்களுக்குச் சென்று வைத்தியம் பார்க்கிறது என்றால், சரியான கஷ்ரம். சிறு வருத்தமென்றாலும் ஊர்காவற்துறைக்குச் செல்லவேண்டும். இந்த நிலைகள் மாறுவதற்கு இவ் வாறான மருத்துவ முகாம்கள் எமக்கு அடிக்கடி நடத் தப்படவேண்டும்.

**சுகாதார தொண்டர்கள், எழுவைதீவு.**



இங்குள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒவ்வொருநாளும் நாம் கடமையில் உள்ள போதும், பொது மக்களுக்கான மருந்தகங்களோ அன்றி, மருந்து கட்டும் உபகரணங்கள் இன்றியே கடமை தொடர்கின்றது. இந்த நிலையில் எமது தீவுக்கு இவ்வாறான மருத்துவ முகாம்கள் அடிக்கடி நடைபெற்றால்தான் உதவியாகவிருக்கும். இன்று நடைபெறும் மருத்துவ முகாம் எமது மக்களுக்கு அவசியமானது. இதேவேளை மாதத்தில் மூன்றாவது வியாழக் கிழமைகளில் மட்டும் கர்ப்பிணிப் பெண்களுக்கான கிளினிக் நடைபெறும். இடையில் ஒரு அவசரம் என்றால் பெரும் சிரமம். எனவே எமது தீவுக்கு நடமாடும் மருத்துவ சேவையை நடத்த வேண்டும்.

**யோ.லோறன்ஸ்தாஸ்**
**எழுவைதீவு - 05**



எழுவைதீவு மக்களுக்கு மருத்துவ வசதி என்பதே முற்றுமுழுதாக இல்லாத நிலையில், இன்று நடைபெறும் இந்த மருத்தவ முகாமானது எமக்கு மிக மிகவும் முக்கியமானதொன்று. இன்று எமது தீவு மக்கள் அனைவருமே இதன் மூலம் பயன் பெற்றுள்ள நிலையில், இதுபோல மீண்டும் எமக்கொரு மருத்துவ முகாம் நடத்த வேண்டும். எமது தீவில் ஒரு வைத்தியசாலையோ, வைத்தியரோ இல்லாமையால் எத்தனையோ அவசர நோயாளர்கள் பெரும் சிரமங்களின மத்தியிலே தான் யாழ்ப்பாணத்துக்கும், ஊர்காவற்துறைக்கும் கொண்டு சென்று, சிகிச்சை பெறவேண் டிய நிலையுள்ளதுடன், வறிய மக்கள் இந்தளவு தூரம் பணம் செலவு செய்து செல்வதென்பதும் இயலாததுதான். இதனால் இவ்வாறான மருத்துவ முகாம்கள் எமக்கு அவசியம்.

**ம.ஆரோக்கியநாதர்**
**எழுவைதீவு - 05**



எங்களைப் போன்ற கஷ்டப்பட்ட, வறிய மக்களுக்கு இந்த மாதிரியான மருத்துவ முகாம் அவசியம் தேவையானது தான். இது மாதிரி எமக்கு தொடர்ந்து செய்தால் தான் இதன் பலன் எமக்கு முழுவதுமாகக் கிடைக்கும். இப்போது ஒரு தடவை வந்து, மருந்து தந்து விட்டுச் சென்றால், அதன் பின்னர் யார் வந்து எமக்கு மீதி மருந்து தருவது. அதனால்தான் இவ்வாறான மருத்துவ முகாம்கள் எமக்கு அடிக்கடி நடத்தப்பட வேண்டும். அப்போது தான் எமது மருத்துவ தேவைகள் பூர்த்தி செய்யப்படும்.

**தொ.செபமாலை**
**எழுவைதீவு - 03**

எங்களது வறிய கிராமத்துக்கு இன்று நடைபெற்ற இந்த மருத்துவமுகாம் முக்கியத்துவம் வாய்ந்தது. நிறைய பிரச்சினையின் மத்தியில்தான் எங்களுடைய மருத்துவ தேவையை நாங்கள் பூர்த்திசெய்கின்றவேளையில், இது எங்களுக்குக் கிடைத்ததொரு வரப்பிரசாதம்தான். இந்த மருத்துவ முகாமை நடத்துவதற்குப் பல்லாயிரம் ரூபாக்கள் செலவு செய்துள்ளனர். இதற்கு எமது தீவகமக்கள் நன்றியுடையவர்களாக இருக்க வேண்டும். இவ்வாறு மருத்துவ உதவிகள் கிடைக்காத எமது தீவக மக்களுக்கு இவ்வாறான உதவிகள், மருத்துவ முகாம்கள் அடிக்கடியோ அன்றி, மாதமொருமுறையாவது நடத்தப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கையாக உள்ள தையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**திருமதி அமிர்தநாதர்**
**எழுவைதீவு - 03**



மருத்துவ வசதிகள் அற்ற நிலையில் எமது வாழ்நாளையோட்டிக் செல்லும் எமது மக்களுக்கு, இவ்வாறானதொரு மருத்துவமுகாம் அவசியமானது. இவ்வாறான சேவையை நாம் பெரிதும் வரவேற்கின்றோம். நோயால் பீடிக்கப்பட்டவர் களை படகிலும், வாகனத்திலுமாக மாறி மாறி ஏற்றிக்கொண்டு சென்று, வைத்தியம் செய்யவேண்டிய நிலையில்தான் நாம் இன்று வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். வசதிகள் அற்ற நிலையிலுள்ள மக்கள் இவ்வாறு வெளியிடங்களுக்குச் சென்றுவருவது கடினம். எனவே இவ்வாறான மருத்துவ முகாம் இன்னும் பல வசதிகளுடன் அடிக்கடி செய்யப்பட வேண்டும்.

# சைப்பிரஸில் உள்ள ஐ.நா. படையினரை குறைப்பதற்கு முடிவு!



சைப்பிரஸ் நாட்டிலுள்ள ஐ.நா.சமாதானப் படையினரின் தொகையை மூன்றிலொன்றாகக் குறைப்பதற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையிலுள்ள நாடுகள் வாக்களித்துள்ளன.

சைப்பிரஸிலுள்ள சமாதானப் படையினரை 860 ஆக குறைக்கலாமென ஐ.நா. செயலர் வழங்கிய சிபார்சையடுத்தே இந்தப் பாதுகாப்புச் சபையிலுள்ள 15 நாடுகளும் வாக்களித்துள்ளன.

சைப்பிரஸில் ஸ்திரத்தன்மை தற்போது ஏற்பட்டுவருவதாகவும் சட்டம் ஒழுங்கு நிலைமையில் முன்னேற்றம் ஏற்பட்டுவருவதாகவும் ஐ.நா.செயலர் கொபி அனான் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் கூடிய ஐ.நா. பாதுகாப்புச் சபை, தனது உதவியமைப்பொன்றின் ஆளணி வளத்தை 2005 ஆம் ஆண்டுவரை நீடித்துள்ளது.




இதன்பின் அங்கு ஆளணி வளம் தேவையெனில் அது புதுப்பிக்கப்படும் எனவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

சைப்பிரஸில் தற்போது 1224 ஐ.நா. சமாதானப் படையினர் பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஈராக்கின் றமாடி நகரில் அமைந்துள்ள

# பொலிஸாரின் பயிற்சி நிலையம் மீது தற்கொலை கார்க்குண்டு தாக்குதல்!

## 16 பொலிஸார் பலி; 50 இற்கும் மேல் படுகாயம்

(பாக்தாத்)

ஈராக்கின் றமாடி நகரிலுள்ள பொலிஸ் பயிற்சிநிலையம் மீது நடத்தப்பட்ட தற்கொலைக் கார்க் குண்டுத் தாக்குதலில் 16 ஈராக்கியப் பொலிசார் கொல்லப்பட்டதுடன் 50 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர். பயிற்சி நிலையத்தில் பொலிஸார் பயிற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவேளை தற்கொலை குண்டுதாரி வெடிமருந்து நிரப்பப்பட்ட காரைச் செலுத்திவந்து வெடிக்கவைத்துள்ளார்.



இதேசமயம் பலூஜா நகரில் வைத்து அபுமுசாப் அல்சர்ஹாவி தீவிரவாதிகளின் முக்கிய தலைவர் ஒருவர் உட்பட ஐவரை தாம் கைது செய்துள்ளதாக அமெரிக்க இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட தீவிரவாதியின் பெயரை வெளியிட மறுத்துள்ள அமெரிக்கப் படையினர், கைது செய்யப்பட்டவர் முக்கிய நபரெனவும் அண்மைக் காலமாக பலூஜா நகரில் இடம்பெற்ற ஆட்கடத்தல் மற்றும் தற்கொலை குண்டுத்தாக்குதல்களுக்கு காரணமானவர் எனவும் தெரிவித்தனர்.

இதேசமயம் நேற்று பலூஜா நகர் மீது அமெரிக்க குண்டு வீச்சு விமானங்கள் நடத்திய தாக்குதலில் இரு பொதுமக்கள் கொல்லப்பட்டதுடன் மூவர் காயமடைந்தனர்.

பலூஜா நகரில் அபுமுசாப் அல்சர்ஹாவி தங்கியிருப்பதாகக் கிடைத்த தகவலை அடுத்தே தாம் தாக்குதலை நடத்தியதாக அமெரிக்கப் படையதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேசமயம் பாக்தாத் நகரில் இடம்பெற்ற மற்றுமொரு குண்டு வெடிப்பில் 6 அமெரிக்கப் படையினர் படுகாயமடைந்ததாக அமெரிக்க இராணுவம் தெரிவித்துள்ளது.

இதே வேளை சமாறா நகரில் இடம்பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் ஈராக்கிய தேசியகாவற் படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் 6 தேசிய காவற்படையினர் காயமடைந்தனர்.

மொசூல் நகரத்தில் ஈராக்கியத் தீவரவாதிகள் துருக்கிய வாகனமொன்றின் மீது மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் வாகனச் சாரதிகள் இருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் இருவர் காயமடைந்தனர்.

## கோஸ்ரறிக்கா நாட்டின்

# முன்னாள் ஜனாதிபதிகள்இருவர் ஊழல் குற்றச்சாட்டில் கைது!



கோஸ்ரறிக்கா நாட்டின் முன்னாள் ஜனாதிபதிபதி ரபீல் ஏஞ்சல் கால்டிறோன் அவரது பதவிக் காலத்தில் செய்த ஊழல்களுக்காக கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டு ஒன்பது மாத சிறைத்தண்டனைக்கு ஆளாகியுள்ளார்.

இவருக்கான இந்தத் சிறைத்தண்டனையை கோஸ்ரறிக்கன் நீதிமன்றம் வழங்கியது. இவர் கோஸ்ரறிக்காவின் கிழக்குப் பகுதியிலுள்ள சிறையொன்றில் தடுத்து வைக்கப்படவுள்ளார்.

இவரது ஆட்சிக்காலமான 1990 முதல் 1994 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இவர் சட்டவிரோதக் குழுவொன்றை அமைத்து பின்லாந்திலிருந்து மருத்துவ உபகரணப் பொருட்களைக் கொளவனவு செய்ததாகவும் அதன் மூலம் பெருமளவு மோசடிகளைச் செய்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால் இந்தக் குற்றச்சாட்டை மறுத்துள்ள கால்டிறோன், தனது ஆட்சிக்காலத்தில் தான் எந்தவொரு பிழையான செயற்பாட்டையும் மேற்கொள்ளவில்லையெனத் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த வாரமும் கோஸ்ரறிக்காவின் மற்றொரு முன்னாள் ஜனாதிபதியான மிக்கல் ஏஞ்சல் றொட்றிக்கோ என்பவரும் ஊழல் மோசடி தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு ஆறுமாதகால வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் தனது 1998 முதல் 2002 ஆம் ஆண்டு வரையான ஆட்சிக் காலத்தின்போது 2001 ஆம் ஆண்டு பிரான்ஸ் நாட்டு தொலைத்தொடர்பு நிறுவனமொன்றுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தில் மோசடி செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளா.

# ஆப்கான் தலைநகர் காபூலில் தற்கொலைத் தாக்குதல்; 15 பொதுமக்கள் காயம்!

ஆப்கான் தலைநகர் காபூலிலுள்ள பிரபல்யமான சந்தைத் தொகுதி அமைந்த மாவட்டமொன்றில் நேற்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதலில் ஆறு பேர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலில் காயமடைந்தவர்களில் சர்வதேச சமாதானப் படையினர் இருவரும் அடங்குவர். இவர்களை இலக்குவைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக நம்பப்படுகிறது.

இந்த தற்கொலைத் தாக்குதலை நடத்தியவரின் உடல் அந்துப் பகுதியிலுள்ள வீதியில் கிடப்பதாக செய்திகள் தெரிவித்தன.

தாக்குதலை நடத்திய தற்கொலையாளி ஆறு குண்டுகளைத் தனது உடலில் கட்டியிருந்ததாக காபூல் பொலிஸ் அதிகாரி ஜெனரல் பாபாஜான் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.

இந்த வருடம் ஜனவரி மாதத்திற்கு பின்னர் தலைநகர் காபூலில் நேற்று இடம்பெற்ற முதலாவது தற்கொலைத் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல்; ரூபா 40 ஆயிரம் கோடி செலவு!

(வொஷிங்ரன்)

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. கடந்த 2000 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இந்த வருடத் தேர்தல் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் இப்போதைய அதிபரும் குடியரசு கட்சி வேட்பாளருமான ஜோர்ஜ் புஷ் மீண்டும் போட்டியிடுகிறார். அவரை எதிர்த்து ஜனநாயகக் கட்சி சார்பில் ஜோன் ஹெரி போட்டியிடுகிறார்.

தேர்தலுக்கு இன்னும் ஒரு வாரமே இருப்பதால் தேர்தல் பிரசாரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. இருவருமே அமெரிக்கா முழுவதும் பல்வேறு மாகாணங்களில் சுற்றுப்பயணம் செய்து தீவிர தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர். தேர்தல் செலவுக்கு கட்சி நிதி திரட்டும் நிகழ்ச்சியிலும் அவர்கள் கலந்து கொண்டனர்.

இந்த தேர்தலில் அமெரிக்காவில் இதுவரை இல்லாத அளவுக்கு தேர்தல் செலவு அதிகரிக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது. எமது நாட்டு மதிப்பில் சுமார் 40 ஆயிரம் கோடி ரூபா இந்தத் தேர்தலில் செலவாகும் என்று தெரியவந்துள்ளது. அதிபர் தேர்தலையொட்டி நடக்கும் காங்கிரஸ் சபை தேர்தலுக்கும் சேர்த்து இந்தத் தொகை செலவிடப்படுகிறது.

கடந்த 2000 ஆம் ஆண்டில் நடந்த தேர்தலைவிட இது 30 சதவீதம் அதிகம். ஜோர்ஜ் புஷ் வென்சில்வேனியாவுக்கு மட்டும் 40 தடவை சென்று தேர்தல் பிரசாரம் செய்தார். இவருக்கு இங்குதான் கடந்த தேர்தலில் பெரும் சோதனை ஏற்பட்டது. அல்கோருக்கு இங்கு அதிக வாக்குகள் கிடைத்தன. இதனால் அங்கு புஷ் இப்போது அதிக கவனம் செலுத்தி வருகிறார்.

ஜோன் ஹெரி - ஒகியோ பகுதிக்கு மட்டும் 24 தடவை பயணம் செய்து பிரசாரத்தில் ஈடுபட்டார். இங்கும் புஷ்சுக்கும், ஜோன் ஹெரிக்கும் இடையே போட்டி மிகக்கடுமையாக இருக்கும். தேர்தல் பிரசாரச் செலவும் தேர்தல் செலவுடனேயே சேர்த்து கணக்கிடப்படுகிறது.

தனிப்பட்ட முறையில் கட்சிக்கு நன்கொடை வழங்கும் தொகையை இரு மடங்காக உயர்த்திக்கொள்ள அனுமதிக்கும் சட்டம் சமீபத்தில் கொண்டுவரப்பட்டுள்ளது. தனிப்பட்டவர்கள் மூலம் 250 கோடி டொலர் திரட்டப்பட்டுள்ளது. தனிப்பட்ட ஒருவர் 2000 டொலர் வரை நன்கொடை வ்ழங்கலாம்.

ஜோன் ஹெரிக்கு ஆதரவாக முன்னாள் அதிபர் பில் கிளின்டன் இன்னும் ஓரிரு நாளில் பிரசாரம் செய்ய திட்டமிட்டு இருக்கிறார். இருதய சத்திரசிகிச்சைக்குப் பிறகு அவர் இப்போது பூரண குணமடைந்துவிட்டார்.

## ஈராக்கில் கடத்தப்பட்ட

# 'கெயார் நிறுவன பணியாளரை விடுதலை செய்யக் கோரிக்கை!


கெயார் அமைப்பின் பொதுச் செயலர்

(பாக்தாத்)

ஈராக்கில் கடந்த செவ்வாய்க்கிழமை கடத்தப்பட்ட சர்வதேச உதவி நிறுவனமான 'கெயார்' அமைப்பின் ஈராக்கிற்கான பணிப்பாளரான மார்க்கிரட் ஹசனை உடன் விடுதலை செய்யுமாறு 'கெயார்' நிறுவனம் கடத்தல்காரர்களை கோரியுள்ளது.

'கெயார்' அமைப்பின் பொதுச் செயலாளரான டெனிஸ் கெய்லக்ஸ் - கடத்தல்காரர்களிடம் அல்ஜசீரா மூலம் தெரிவித்த மனுவில் - மார்க்கிரட் ஹசன் ஈராக்கைச் சேர்ந்தவர். அவர் மீது, அவரது குடும்பத்தினரும், ஈராக் மக்களும் மிகவும் அளவு கடந்த அன்பு வைத்துள்ளனர். எனவே இந்த யதார்த்த நிலையைப் புரிந்துகொண்டு அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு கேட்டுள்ளார்.


கடத்தப்பட்ட மார்க்கிரட் ஹசன்

அத்துடன் ஹசனின் உடல் நிலை தொடர்பில் 'கெயார்' அமைப்பு மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளதாகவும் எனவே இதனையும் கடத்தல்காரர்கள் கருத்தில் கொண்டு அவரை விடுவிக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதேவேளை கடைசியாக வெளிவந்த வீடியோ ஒளிநாடாவில் கடத்தப்பட்ட ஹசன், ஈராக்கிலுள்ள பிரிட்டிஷ் படையினரை உடன் வெளியேற்றி தனது உயிருக்கு உத்தரவாதம் வழங்குமாறு பிரதமர் ரொனி பிளேயருக்கு உருக்கமான வேண்டுகோளொன்றை விடுத்துள்ளார்.

அத்துடன் ஈராக்கிலிருந்து படைகளை விலக்குமாறும், பாக்தாத்திற்கு பிரிட்டன் படைகள் புதிதாக செல்வதனை அனுமதிக்க வேண்டாமென பிரிட்டன் மக்கள் பிரதமருக்குத் தெரிவிக்குமாறும், இதன்மூலம் தனக்கு உதவுமாறும் ஹசன் அந்த வீடியோ நாடாவில் கேட்டுள்ளார்.

கடத்தப்பட்ட ஹசன் - ஈராக் மற்றும் பிரிட்டன் நாடுகளின் பிரஜாவுரிமைகளைப் பெற்றவராவார். அத்துடன் 30 வருடமாக ஈராக்கில் வாழ்ந்து வருகின்றார். கடந்த 13 வருடகாலமாக அவர் ஈராக்கில் மக்களுக்கான சுகாதாரம், நீர் விநியோகம், மற்றும் மனிதாபிமான உதவிகளையும் செய்து வருகின்றார்.

எனது மனைவி அரசியல் வாதியல்ல. அவர் ஒரு மனிதாபிமானப் பணியாளர். எனவே அவரை விடுதலை செய்யுமாறு ஹசன் திருமணம் முடித்த ஈராக்கிய கணவர் தக்ஷின் அலி ஹசன் கடத்தல்காரர்களை கேட்டுள்ளார்.

ஹசனின் வீடியோ ஒளி நாடாவை பார்த்த பிரிட்டன் வெளியுறவுச் செயலர் யக்சிரோ, இது தொடர்பாக தெரிவிக்கையில் இது உண்மையிலேயே ஒரு துயரமான விடயம். அவரின் குடும்பத்தினர் இதனால் துயருறுவர். இதற்காக நான் மிகப் பெரியளவில் அனுதாபப் படுகின்றேன். அத்துடன் ஈராக் மக்கள் அனைவரும் எம்முடன் இணைந்து ஹசனை உடன் விடுதலை செய்வதற்கு குரல் கொடுப்பார்கள் என நாம் நம்புகின்றோம் எனவும் அவர் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# எமக்கு யுத்தம் ஒன்று தேவையில்லை; சமாதானத்துக்கு குரல்கொடுப்போம்!

## இலங்கை கலைக்கழகத் தலைவர் சாள்ஸ் தயானந்த தெரிவிப்பு

இலங்கையில் நிலையான சமாதானம் ஒன்று நிலவவேண்டும் என்பதையே நாம் விரும்புகிறோம். யாழ். நூல்நிலையம் எரிக்கப்பட்டமை மிகவும் கீழ்த்தரமான - கொடூரமான செயல். இதற்கு மனம் வருந்துகின்றேன் என இலங்கை கலைக் குழுத் தலைவர் சாள்ஸ் தயானந்த தெரிவித்தார்.

அமைச்சர்கள், சீன அரசாங்கம், எழுத்தாளர்கள், புத்தக வெளியீட்டாளர்கள், பாடசாலைகள், பொதுமக்கள் என பல் வேறுதரப்பினரிடமிருந்து சேகரித்த பொருட்களை - இலங்கை கலைக் கழகம் அன்பளிப்புச் செய்யும் வைபவம் நேற்று யாழ். பொது நூலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றபோது உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்ததாவது -

கலைஞர்கள் என்போர் மதம், மொழி என்பவற்றுக்கு அப்பாற்பட்டவர்கள். எனவே, கடந்தகால வரலாற்றை மறந்து ஒற்றுமையாக நாம் வாழ வேண்டும். மொழியின் பிரிவை நாம் மறக்கின்றபோது மனிதர்கள் என்ற ரீதியில் ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள்.

எமக்கு யுத்தமொன்று அவசியமில்லை. ஒருமித்து சமாதானத்துக்காக குரல்கொடுக்கும்போது வடக்கிலும் தெற்கிலுமுள்ள இலக்கியவாதிகளை ஒன்றுதிரட்டி பெரிய மகாநாடு ஒன்றை நடத்தவேண்டும். அல்லது கலைத்திறன் விழா ஒன்றை நடத்தவேண்டும்.

ஐக்கியத்தை நிலைப்படுத்தி சமாதானத்தை முன்னெடுப்போமென அவர் மேலும் தெரிவித்தார்.

# 'அம்மா' இசைத்தட்டு நேற்று வெளியீடு!

'அம்மா' இசைத்தட்டு வெளியீட்டு விழா நேற்றுக்காலை 10.30 மணியளவில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் மோகனதாஸ், யாழ் மாவட்ட அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் செம்மணன், கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை நிகழ்த்தினார்.

இசைத்தட்டை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் சு.மோகனதாஸ் வெளியிட்டு வைக்க, விரிவுரையாளர் சிவராஜா முதல் பிரதியினைப் பெற்றுக்கொண்டார்.



# தேர்தல் ஆணைக்குழுவின் நியமனம் தாமதமாகும்!

தேர்தல் ஆணைக்குழுவை நியமிப்பது தொடர்பாக அரசியலமைபபு சபை பின்பற்றும் நடவடிக்கையால், 2006 நவம்பர் மாதம் வரை அதனை உருவாக்க முடியாமல் இருப்பதாக தேர்தல் திணைக்களத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழுவுக்கு நியமிக்கப்படுபவர்களது பெயர்கள் அரசியலமைப்பு சபையின் மூலம் ஜனாதிபதிக்கு 2002 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 31 ஆம் பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு அரசியலமைபபு சபை பரிந்துரைத்த முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி ரஞ்சித் தீரரத்னவை நியமிப்பதற்கு மறுப்புத் தெரிவித்த ஜனாதிபதி, அந்தப் பரிந்துரையை மீண்டும் பரிசீலனை செய்யுமாறு அரசியலமைப்புக்குத் தெரியப்படுத்தியிருந்தார். ஆனால், அவரையே நியமிக்க வேண்டுமென அரசியலமைப்புச்சபை மீண்டும் பரிந்துரைத்துள்ளது.

இதனால், 2006 ஆம் ஆண்டு நவம்பர் மாதம்வரை அரசியலமைப்புச்சபையை உருவாக்கமுடியாதிருப்பதாகவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (தே)

### 3 முஸ்லிம்...

இவர்களும் ஆளும் கட்சியுடன் இணையும் பட்சத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 8 இலிருந்து 5 ஆகக் குறைவடையும் என்பது குறிப்பிடத்தக்கது. (01)

### புலிகள் விடுவிப்பு...

கப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையானது ஐக்கிய தேசியக் கட்சியின் வடிவமாகும் இவர்கள் கடந்த கால தமது ஆட்சியின் போது இவ்வாறான பல பண்டமாற்று நடவடிக்கைகளை செய்துள்ளனர். இவ்வாறான பல பண்டமாற்று நடவடிக்கைகள் தொடருமானால் எதிர்வரும் காலங்களில் அரசாங்கத்தால் தேர்தலில் வெல்ல முடியாதெனவும் அவர் தெரிவித்தார்.

### சிரித்திரன்...

பிரபல எழுத்தாளரும் மாநகர சபை ஆணையாளருமான செங்கை ஆழியான், சட்டத்தரணி பொன் பூலோகசிங்கம், யாழ் பல்கலைக் கழக அரசியற்துறை விரிவுரையாளர் கே.ரி.கணேசலிங்கம், காங்கேசன்துறை மக்கள் வங்கி முகாமையாளர் பொன். கணேசமூர்த்தி ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தவுள்ளனர்.

# இந்தியாவுடனான பாது...

இந்த உடன்பாடு கைச்சாத்திடப்பட்டால் தற்போதைய சமாதான முயற்சிகளைப் பாதிக்கும்.

தற்போதைய சமாதான முயற்சிகளின் அடிப்படையாக - விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான படைவலுச் சமநிலையே உள்ளது. இந்திய - இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்பாடு இந்த படைவலுச் சமநிலையை பாதிக்கும்.

இந்தியாவுடனான இத்தகைய பாதுகாப்பு ஒப்பந்தம் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கை அரசபடைகளின் படை வலு நிலையை அதிகரிக்கச் செய்யும் என்பதால் தற்போது நிலவும் படைவலுச் சமநிலை பாதிப்புக்குள்ளாகும்.

படை வலுச்சமநிலையின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டு வரும் இலங்கையின் சமாதான முயற்சிகளும் இதனால் பாதிப்புக்குள்ளாகும் என்றும் அவர் மேலும் தெரிவிததார்..

இதேவேளை, இந்த ஒப்பந்தத்திற்கான வரைபை பூர்த்தியாக்கும் நோக்குடன் இலங்கைக்கு பயணம் செய்திருந்த இந்திய படைத்துறை உயர் அதிகாரிகள் கொண்ட குழுவினர் தமது பணியினை முடித்துக்கொண்டு நேற்று முன்தினம் இந்தியா திரும்பியுள்ளனர் என்று குறிப்பிடப்பட்டது.

# 2 ஸ்ரோக் வாகனங்கள் இறக்குமதிக்குத் தடை!

இரண்டு அடிப்பு (ரூ ஸ்ரோக்) இயந்திரங்களை உடைய வாகனங்களை இறக்குமதி செய்வதை இலங்கை அரசு தடைசெய்யவுள்ளது.

இரண்டு அடிப்பு இயந்திரங்களை உடைய வாகனங்கள் வெளித்தள்ளும் புகையால் சூழல் மாசுபடுவதாலும், குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுவதாலும் - இத்தகைய வாகனங்களின் இறக்குமதியை தடைசெய்யத் தீர்மானித்துள்ளதாகப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் டொன் ஜெயவீர தெரிவித்தார்.

இதற்கமைய இந்தியத் தயாரிப்புக்களான ஓட்டோக்கள் மற்றும் பஜாஜ் ரக ஸ்கூட்டர்கள், ராக்ஷிகள் உட்பட்ட இரண்டு இருப்பு இயந்திரங்களை உடைய வாகனங்களினது இறக்குமதிகள் தடைசெய்யப்படவுள்ளன.

இலங்கையில் பயன்படுத்தப்படும் ஓட்டோக்களில் 90 சதவீதமானவை இரண்டு அடிப்பு இயந்திரங்களைக் கொண்டுள்ளன.

இரண்டு அடிப்பு இயந்திரங்களை உற்பத்தி செய்யும் நாடான இந்தியாவின் சில முக்கிய நகரங்களில் இத்தகைய வாகனங்களின் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

# கொள்ளையில் ஈடுபட்ட 2 பொலிஸார் கைது!

கொழும்பிலும் - கண்டியிலும் இடம்பெற்ற பல கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இரண்டு பொலிஸார் உட்பட 5 பேரை கறுவாக்காட்டுப் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்தனர்.

இவர்களில் ஒருவர்பொலிஸ் சார்ஜன்ட், மற்றுமொருவர் பொலிஸ் கான்ஸ்டபிள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் இருவரும் அமைச்சரவைப் பாதுகாப்புப் பிரிவில் பணியாற்றுபவர்கள் என்று விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

புதையலில் கிடைத்த பொருட்களை விற்பனை செய்ய வந்ததாகக் கூறி வீடுகளுக்குள் பிரவேசிக்கும் இந்தக் குழுவினர், கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ளனர்.

இவர்கள் நேற்று கொழும்பு பிரதம நீதிபதி முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# சமாதானப் பேச்சை ஆரம்பிக்க...

காப்பாற்றவேண்டும்.

கிழக்கு உட்பட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இடம்பெற்று வரும் படுகொலைகள் குறித்து ஜேர்மனிய அரசு கவலையடைந்திருக்கிறது. கடந்த கால போர் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜேர்மன் அரசாங்கம் அக்கறையாக விருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் -

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் பொதுக்கட்டடங்கள் மற்றும் பொதுமக்களுக்குச் சொந்தமான கட்டடங்களிலிருந்து படையினர் 160 நாட்களுக்குள் விலகிச் செல்லவேண்டும்.

ஆனால், இலங்கை இராணுவத்தினர் அதியுயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் தமிழ்மக்களது மீள்குடியேற்ற நடவடிக்கைகளை தடுத்துவருகின்றனர். இன்றுவரை பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர முடியாமல் நலன்புரி நிலையங்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கி வாழ்கின்றனர்.

பெரும்பாலான பயிர்ச்செய்கை நிலங்கள் உயர்பாதுகாப்பு வலயம் மற்றும் கண்ணிவெடிகள் காரணமாக பயிர்ச்செய்கைக்கு உட்படுத்த முடியாத நிலையில் உள்ளன.

தற்போதுள்ள அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னரே வடக்கு - கிழக்கு உட்பட்ட நாட்டின் பல பகுதிகளிலும் அரசியல் கொலைகள் இடம்பெறுகின்றன. இவை யாவும் படையினரின் பூரண கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே இடம்பெற்று வருகின்றன. அதிலும் பெரும்பாலான கொலைகள் விசேட அதிரடிப்படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள கிழக்குப் பிராந்தியத்திலேயே இடம்பெற்று வருகின்றன.

ஆனால், தமது அரசியல் காய்களை நகர்த்துவதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அரசாங்கம் குற்றஞ்சாட்டி வருகிறது. அரசு இதனை விடுத்து உண்மைக் குற்றவாளிகளைக் கண்டறிவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நோர்வே தரப்பின் அனுசரணையுடன் இதற்கான விசாரணைகள் இடம்பெறுமாயின் அதற்கான ஒத்துழைப்பை வழங்க நாங்கள் தயாராகவுள்ளோம்.

இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் சமாதான நடவடிக்கையிலும் பார்க்க இராணுவ ரீதியிலான தீர்விலேயே அரசாங்கம் நாட்டம் கொண்டுள்ளமையே தற்போதைய சமாதானப் பேச்சுக்களின் தேக்க நிலைக்குக் காரணம்.

எதிர்க்கட்சி உள்ளிட்ட அரசியல் கட்சிகள் சில எம்மால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபையினை அடிப்படையாக வைத்துப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு நிபந்தனைகளற்ற ஆதரவைத் தெரிவித்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தை அரசாங்கம் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

எனவே, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை உரிய முறையில் அரசாங்கம் முன்னெடுத்துச் செல்வதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க வேண்டும் என மேலும் தெரிவித்தார்.

**Focus Education Centre**
120, அரசடி வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு முன்பாக)
*Chemistry :*
2006 A/L - Thermo Chemistry :
(Sat/Sun) : 4.30 Pm - 5.30 Pm
2005 A/L - Physical Chemistry :
(Sat/Sun) : 5.30 Pm - 6.30 Pm
Paper Classes:
(Sat/Sun) : 3.30 Pm - 4.30 Pm
(சி-3283)

**பணிநிலை வெற்றிடம்**
**அலுவலக செய்தியாளர்கள்**
'நமது ஈழநாடு' பத்திரிகையின் அலுவலக செய்தியாளர்களாகப் பணியாற்ற விரும்புவோர் எதிர்வரும் 2004. 10.27 புதன்கிழமை காலை 10 மணிக்கு - கல்வித் தகைமைச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.
கல்வித் தகைமை - க.பொ.த (உயர்தரம்)
கிளிநொச்சியில் எமது அலுவலக செய்தியாளராகப் பணிபுரிய விரும்புவோரும் நேரில் வரவும்.
நிர்வாக இயக்குனர்,
நமது ஈழநாடு - 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 24.10.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.